# கவிதேசம்

இதழ்-03 தை, மாசி 2003 (புதுவருட மலர்)



ஆசிரியர். கவிஞர் "திக்கவயல் தர்மு

ரூபா 100/=

## செங்கலடியில்

சீதையின் மோதிரத்தை அனுமான்
பெற்றான்: பேறு பெற்றான்
எனச் சொல்லி என்ன பயன்?
அவர்கள் காலம் முடிந்ததுவே
புவியுலகில்!
ஆகையினால் எமக்கென்று செய்ய
வேண்டும் தங்க நகை ஆபரணங்கள்
வாழும் உலகில்!!
அழகுக்கு அழகுதரும் அத்தனை
ஆபரணங்களும் வாங்குவதற்கும்
விற்பதற்கும் சிறந்த இடம்.



### விஜித்தா ஜூவல்லரி

50, திருமலை வீதி,
செங்கலடி.
065-40046.



## ஈஸ்ரண் றேடிங் கொமினிக்கேசன்

செங்கலடி நகரின் பிரதான சந்திப்பு
இவர்கள்.
தொலைத்தொடர்பு என்றால் என்ன?
தொலையாத நோய்களினால்
அவஸ்த்தைப்படுவோருக்குச்
சரியான நேரத்தில் விற்பனை
செய்யும் மருந்தகத்தின் பெட்டகமும்
இவர்களே!
தொடர்பு கொள்ளுங்கள்.

ஈஸ்ரண் றேடிங், கொமினிகேசன்
ஈஸ்ரண் மெடிக்கல்ஸ்.



இல: 54 மெயின் வீதி,
செங்கலடி.
065-40450. 065-40230.

## மஞ்ஜூரிஸ் கபே

நினைத்தால் இனிக்கும்
நெஞ்சம் உள்ளார்
உலகில் உண்டு
தூரத்தில் இருந்து
நினைத்தாலும் நாவில்
ருசிக்கும் உணவு
வகைகள் யாவும்
இவரிடம் உண்டு.





நீங்கள் மட்டு நகரில் வரும் போது
நல்ல உணவை நாம் தருவோம்.

### மஞ்ஜூரிஸ் கபே

41, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
065-23640.

## + + +

நல்ல டாக்டர் இருக்கிறார்கள்
நம்நாட்டில்!
இல்லை எனச் சொல்லவில்லை
ஈழ நாட்டில்!
ஆனாலும் நல்லமருந்து
இல்லையெனில் என்ன சுகம்
இவர்களினால்?
கல்லாப் பெட்டியில் காசிருந்தாலும்
இல்லாத மருந்துக்கு விலை
கொடுக்கலாமா?
இல்லாத மருந்துப் பொருள்
இல்லை எனாது கொடுத்துக்
காத்தான்குடியில் புகழ் சேர்க்கும்
மருந்துக்கடை

### யுஸ்லா பார்மசி

104/1, மெயின் வீதி,
காத்தான்குடி.
இருப்பிடம்: 065-45142.
Fax : 065-45042.
Mobile : 0777-851007.
M.M.A. LATHEEF.

100/2

உள்ளடக்கம் பக்கம்


| | |
|---|---|
| நில் என்ற சமாதானம் | 2 |
| பாருங்கள் பாருங்கள் | |
| பாதை திறந்தனர் | 3 |
| மரமாயிடு | 5 |
| யுத்தங்கள் வேண்டாம் | 6 |
| அன்பு | 7 |
| காதல் | 7 |
| கழுவுங்கள் | 8 |
| பிடிமண் | 8 |
| ஆயுள் முடிகிறது | 8 |
| ராகங்களில் ரகசியம் | 9 |
| விதி | 9 |
| பஞ்சுப்பூ | 9 |
| இன்றைய இலங்கைத் தமிழ்க் கவிதையின நவீன போக்குகள் | 10 |
| ஓ பெண்ணே! | 13 |
| சமாதானமானது | 13 |
| கவிஞர்கள் யார்? | 14 |
| கவிமாத்திரம் இனிக்குமா? | 14 |
| கவிதைகள் | 14 |
| ஒரு யுகாந்திர மனிதர் | 15 |
| நிறை குடம் | 18 |
| நிவேதனம் | 19 |
| உன் பாதை எது? | 19 |
| பூக்கள் | 19 |
| கவிதை ஒரு கண்கட்டி வித்தை | 20 |
| ஈழத்துப் புத்தர் | 23 |
| அன்புள்ள யாழ்பாணத்து ஐயாவுக்கு | 23 |
| இனஐக்கியம் | 24 |
| இனங்களில் ஒற்றுமைக்கு மனங்களில் வேற்றுமை | 26 |
| வேண்டுவது ஒற்றுமை விலகுவது வேற்றுமை | 27 |
| இல்லை இது கவிதை | 28 |
| வண்டொன்று வந்தது | 28 |
| புதியதோர் உலகம் செய்வோம் | 28 |
| வேண்டும் வேண்டும் பல பிறவி | 29 |
| தூக்குமேடையில் கவிதை | 29 |
| திருத்தொண்டு பாடும் திரையிசை வரிகள் | 30 |
| வாரியார் சொன்னவை | 30 |
| கல்வி கற்போம் | 31 |
| கவி அகராதி | 31 |
| வேண்டும் ஒரு மனைவி | 32 |
| சமதானம் | 33 |
| போனேன் போனேன் | 33 |
| மணிக்கூட்டு முள் | 34 |
| மறக்க நினைத்தாலும் துளிர்க்கும் கவிதைகள் | 14 |
| பாடினார்கள் | 34 |
| அகளங்கனுடன் சில நிமிடங்கள் | 35 |
| எங்களூர் அழுகிறது | 36 |
| கண்ணதாசனின் பார்வையிலே இதயம் கவர்ந்த இலக்கிய வரிகள் | 37 |
| மறக்க முடியாத சாமி சிதம்பரனாரின புதுக்குறள் | 40 |


# கவிதேசம்; ஆசிரியர் உரை

கடந்த ஆறு ஏழு மாதங்களில் கவிதேசம்3 இதழ்களை வெளியிட்டுள்ளது. இந்த இதழ் முதலாண்டுக் கவிதை இதழாகும்.கவிதேசம் கவிஞர்கட்குப் பணமும் போட்டிக் கவிதைக்குப் பட்டு வேட்டியும் தந்து உதவும் ஒரு கவிதைச் சஞ்சிகை. எனவே இதன் விலைகணிசமான அளவு உயர்ந்துள்ளது.

இதன் செலவினங்களை உள்ளுராட்சி நிறுவனங்களே எமக்குத் தந்து ஊக்கப்படுத்துகின்றன.எனவே தனிப்பட்ட வாசகர்கள் எம்மைக் குறைகூறாது கவிதேசத்தை ஆதரிக்கவேண்டும். எனக்குத் தொழில் கவிதை என்றான் பாரதி. எமக்குத் தொழிலும் கவிதையே.இன்றைய வாழ்க்கைச் சூழலில் தனிப்பட்ட சுற்றுக்கான இச்சஞ்சிகையை நீங்கள் ஓரளவாவது உங்கள் பணத்தை இழந்து ஆதரிக்க வேண்டும். தனிப்பட்ட வாசகர்கள் எமக்கு ரூபாய் 60/- முத்திரைகள் அனுப்பித் தனிப்பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

எமது கவிதேசம் சஞ்சிகையில் வெளியாகும் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆசிரிய தலையங்களே!

பிறிதொரு ஆசிரியர் தலையங்கம் தேவையில்லை என்பதால் நாம் அதனை எழுத முற்படவில்லை!

எழுதிய கவிதைகட்கு அந்தந்தக் கவிஞர்களே பொறுப்பு என்ற பயத்தாங் கொள்ளி நியாயங்கட்கு கவிதேசம் கட்டுப்பட்டது அல்ல!

எழுதி வெளிவந்த கவிதைகட்கு ஆசிரியரே முழுப் பொறுப்பு.

உண்மை, நியாயம், பயமின்மை, முட்டாள் களுக்குச் சாட்டையடி, புதிய சமுதாயம், விடுதலை என்பன கவிதேசத்தின் தாரக மந்திரங்கள். இந்தத் தர்ம நியாயத்தின் பக்கம் நியாயம் இருப்பதாக நம்புபவர்கள் யாவரும் கவிதேசத்தில் எழுதலாம்.

மரபுக் கவிதையாகட்டும், நவீன கவிதையாகட்டும் சொல்வதில் உணர்வு, கலைப்பண்பு இருப்பின் அக்கவிதைகளைக் கவிதேசம் ஏற்றுக்கொள்ளும்!

தொடர்ந்து எழுதுங்கள்.

வெற்றி கவிஞர்கட்கே!

நன்றி
கவிஞர் திக்கவயல் தர்மு.



7045

# நில் என்ற சமாதானம்

காலுண்டா, கையுண்டா
எனப் பாரீர் இவ்வுலகில்!
காலில்லைக் கையில்லை
வாலில்லை; ஆனாலும்
எம் தலையில் ஏறி இருக்குதடா
பேன் நின்று!
ஏணி வைத்தா அது
எம் தலையில் ஏறியது?
எங்களைக் கேட்டா
சிவப்பு ரத்தம் குடிக்கிறது?
எங்களைக் கேட்டா
உயிர் விட்டுச் சாகிறது
நம் நகமடியில்?
நித்திரையில் வந்து
நுளம்பென்று குத்துகையில
குத்தியது நுளம்பென்று
விடிந்ததும தான் தெரிகிறதா?

டெங்கென்ற காய்ச்சல்
இவ்விடத்தில் வந்துற்று
காய்ச்சல் என ஒன்று
கனதியாகக் காய்கையிலே
இரவில் கடித்ததுவு
நுளம்பென்று தெரிகிறது?
நல்லவேளை

பாம்பென்று வந்து படுக்கையிலே
கடித்திருந்தால், இந்த நேரம், நாங்கள்
இருப்போமா இல்லீரே?

அவரவர்கள் தங்கள் தொழில்
கச்சிதமாய்ச் செய்கின்றார்.
ஒழித்தொழித்துச் செய்கின்றார்.
குட்டினால் சாகிறது; குனிந்தடித்து
அடித்துவிட்டால், காலடியில்
சாகிறது?
நாங்களும்தான் சோத்துக்காய்த்
தண்ணீர்க்காய உயிர் விடுவோம்
என்றிராமல்
ஏட்டினிலே இடம் பிடிக்க
நாட்டினிலே எழுந்திடுவோம்; ஊர்
வீட்டான் பூட்டினிலே கை வையா
வாழ்வொன்று அமைத்திடுவோம்.
நல்ல கவி செய்திடுவோம்!
எம் மக்கள் நொந்தொருகால்
படுத்தாக்கா, எழுச்சி மிகு கவிதைகளைப்
படைக்கின்ற கவித்தொட்டில்
நாம் செய்வோம்!

வில்லுக்குச் சேவை செய்யும்
அம்புகளாய் நாம் வாழோம். இப்புவியில்
அம்பொன்றின் அறிவுரையை அணிந்துரையாய்
நாம் கேட்டு, வில்லொன்றை வளைத்திடுவோம்.
வீணாக வில் வளையோம்!

நாகாக்க என்ற வள்ளுவனின்
சொல் ஒன்றைச் சோக்காக
என்றுமே சோற்றுக்காய் எடுத்துரையோம்!
கல் ஒன்றைக் காட்டி மண்ணுக்கு மூத்தகுடி
சொல்லு விளையாட்டைக் காலடியில்
நாம் மிதிப்போம்.

பேரினத்தார் விளையாட்டு நாம் தவிர்ப்போம்
ஈரினத்தார், மூவினத்தார், ஓரினத்தார்
விளையாட்டு என்றுமே தவிர்ததிடுவோம்!
அவரவர்க்கு இருந்த இடம் அவரவர்க்கு
என்றுரைப்போம்!
எங்களை மிதிப்பவரை என்றுமே
நாம் மிதிப்போம்
எங்களை அரவணைக்கும் நல்லவரை
நாம் முதலில் முத்திடுவோம்!

முல்லைக்கொடிக்கு நாம்
தேர் கொடுக்கா விட்டாலும்
இலை ஒன்றே சுண்டி நாங்கள்
சட்டியிலே வறுத்தெடுப்போம்
வேர், தண்டு எடுக்க மாட்டோம்
வெத்திலையை எடுப்பதுபோல்!
நாளைக்குப் பூ மலரும் என்றகுடி
நாமென்று
தேர் கொடுக்கா விட்டாலும்
நாம் எடுக்கோம் வேர் இங்கு!

போர் ஒன்று மூண்டு
சமாதானம் வந்திட்டால்
சமாதானம்; சமாதானம்
ஆமாமாம்! உரிமையுடன்
சமாதானம்; உபவிதியாய்
நாம் அமைப்போம்!

காலுக்குள் மிதிவெடியைக்
கணக்காக ஏவி விட்டு
மேல் காற்றில் வந்து
'ஷெல்' ஒன்றை ஏவிவிடும்
'கொல்' என்ற குணங்களையே
அழிந்து போ என்கின்றோம்!
செல்லாத குடிகள் எனச் சீன
வெடி நீர் ஏவின்
நில்லாது போகும் 'நில்'
என்ற சமாதானம்.


**கல்லடிக் கதிர்காமு**

# பாருங்கள்! பாருங்கள்! பாதை திறந்தனர்.

வெண்பா நான் அறியேன்.
விருத்தமும் நான் புரியேன்.
வஞ்சிப்பா, கலிப்பாவும் வல்லமையாய்ப்
புனைவதற்கு வழிவகையும்
நானறியேன்!
எனக்குத் தெரிந்தது புதுக்கவிதை.
ஆமாம் புதுக்கவிதை!
இவ்விடத்தில் வித்துவான்கள்
பண்டிதர்கள், புலவர் மணி
யாராச்சும் வந்திருந்தால்
தயவு செய்து யாப்பினைக்
கோப்பினை, இலக்கணத்தை
நான் பாடவில்லை எனச்
சீரழித்துச் செல்லாமல்
அமைதி காக்க.
கவி வணக்கம் தலைவர்க்கே,
ஆனாலும் கவி தந்த
இறைவனுக்கே முதல் வணக்கம்.
மற்றும் வாலின்றிச் சபையேறித்
தாமும் கவி ஏறு எனச்
சொல்லும் பாவாணர் பரம்பரைக்கும்,
மெத்தப் படித்த சபையினர்க்கும்
இத்தனை வயதினிலும், இத்தனை
பேரினையும் அன்புக் கயிறெடுத்து
ஆற்றலினால் கட்டி ஆளும் மருதூர்
வாணருக்கும் என்வணக்கம்.

முந்தி ஒருநாள் முழுநீள நுளம்புத்திரி,
பிந்தி ஒருநாள் ஒரு போத்தில் மண்எண்ணெய்
ககலை ஒரு ரொபி, ஒரு கொத்தரிசி, ஒரு பற்றி
கொண்டுபோகவே பறித்தெறிந்தார்
பத்தைக்குள்ளே!
அந்திபட வந்து அதனை அவர் எடுத்து
வித்தாரே இரவுச் சந்தைக்குள்ளே!
வடக்கே இருந்த பாதையை
இப்போது திறந்தனர்!
A9 பெயருக்குள்ளே!
பாருங்கள்! பாருங்கள்! பாதை திறந்தனரே!
பாருங்களே!
மண்எண்ணெய் கொஞ்சம் கூடவே
கொண்டு சென்றதுக்காய், 13 குடிகளைக்
கொன்றனர் மன்னார்த்தீவிலே!
இப்போது திறந்தனர் பாதையே.
புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்தது, வந்தது
வடகிழக்கே!

யாழ்ப்பாண நாக விகாரை திறந்திருக்கு
வடக்கே!



அங்கே போய், பனங்கள்ளு
புளூக் கொடியல், கறுத்தக் கொழும்பான்
கப்பல்வாழை, தோலகட்டி முந்திரிகை
தேடுகிறார் லாபமாகவே!

யார் இனித் தேடப் போகிறார் உக்கிப்
போன தமிழரிவர் எலும்புகளைச்
செம்மணியிலே!
ஆதலினால் அழிந்துபோன உறவுகளின்
எலும்பெடுத்து வாழ்வோம் இந்நாட்டில்
சரிநிகரே என்றுரைத்துப் பாடுகிறேன்
கவிதை ஒன்றே.

விளக்கு வைத்த குளத்திருந்து
மரை அடித்த குளம் ஈறாய்
மாங்குளம் கனகராயன்குளம்
என்றெடுத்துப் போகுங்கால்
ஆனையிறவு இருந்து அரியாலை
மட்டுமந்தோ..... 20 லட்சம்
மிதி வெடிகள் அங்கிருக்கு.
மிதி வெடிகள் அகற்றுகிற
மனிதநேயன் ஐங்கரனும்
பாம்பொன்று கடித்துப்
பரலோகம் போனானே!

காலையும் மாலையும் றோட்டருகில்
காலை வைச்சால்
முழங்காலுக்குக் கீழே
முழுப்பாதம் றோட்டருகில்
பிளந்து விழும்!
மேய வந்த ஆடு மாடு
பாயவந்த கருங்குரங்கு
இத்தனையும் இவ்விடத்தில்
இறந்திருக்கும்! ஆனாலும் கொட்டி சுடுவானே
என ஏங்கிப் பலர் இருந்தார்
பாருங்கள்! இத்தனை இலட்சணத்தில்
பாதை திறந்தனரே
இவ்விடத்தில்!

ஆடு, மாடு கட்டும் தொழுவம்போல்
ஏடு மாடாய் எங்களுக்கு 'ரென்ட்' அடித்து
ஒவ்வொரு தமிழனாய்க் கால் தடவி
கைதடவி, உட்பக்கம் லேசாக அவர்தடவி
''கொட்டியோ'' நீ என்று கேள்வி கேட்டு
பெட்டி படுக்கைகளை நீள்தடவி
கொட்டு கொட்டு எனக் கொண்டுவந்த
கொட்டைப் பெட்டியினையும் அவர்தடவி!

கொட்டியோ கொட்டி என எவ்விடத்தும்
கொட்டினரே. அடிசக்கை. இதை மறந்தும்
பாருங்கள்! பாருங்கள்! பாதை திறந்தனரே

நாயாறு, மணலாறு, கருநாட்டுக் கேணி
புல்மோட்டை, ஒதியமலை, நெடுங்கேணி
இந்த ஊர் மக்களையே ஒரு இருவில்
ஊர் துறந்து அவர் போக,
பின் தொடர்ந்து துரத்தினரே,
பனையாலை விழுந்தவனை
மாடேறி மிதித்ததுபோல், அன்னவரை
ஆண்டுக் கணக்காக, அகதி முகாம்
அவர் அமைத்து, வகை வகையாய்
வதைகளிவர் செய்தனரே!

அகதி முகாம் அப்பாலே அரையடிதான்
போவதற்கும் பாஸ் முறைகள் செய்தீரே!
காசடித்தீர்; மானமதைச் சாகடித்தீர்;
மர்ம இரவுகளில் பேச முடியா
ஊமைகளை பேப்பே எனப் பேசவைத்து
குரங்கிடத்துப் பூமாலை அவள்
வயிற்றில் இட்டீரே?
பயித்தியமாய்த் திரிந்த பாவையவள்
வாழ்க்கையினை இரவுப் பலியாக
இழவாக எடுத்தீரே?
இப்போது பாதை இனிதாகத் திறந்தீர்.
போகுங்கள் யாழ்ப்பாணம்
நாங்களங்கு போவதற்கு
முன்னாலே.
கை இழந்த, கால் இழந்த, விழி இழந்த
தமிழ்ப் பெண்கள் அவ்விடத்தில்
இருக்குதங்கு! இவர்களையே
இவ்விடத்தில்
இங்கிதமாய்ப் பார்ப்பதற்கு
பாருங்கள்! பாருங்கள்! பாதை திறந்தனரே.

**A9** பாதை திறக்கா விட்டாலும்
போகலாம்! போகலாம்! பிளேனின் உள்ளே
ஆனாலும் கொட்டி சுடுவானே
என ஏங்கிப் பலர் இருந்தார்
பேரினத்தின் உள்ளே, உள்ளே.....
யாழ்ப்பாணம் போவோம் என்றாலும்
அனுமதி எனவிங்கு அறிவித்தார்
பேப்பரிலே!
ஒருநாடு இதுவென்றால்
இதுவன்றோ ஒப்பாரி.
சுண்டைக்காய் கால்பணமாய்
சுமைகூலி முக்காலாய்
லஞ்சமாய் பணம் கொடுத்து
பஞ்சமாய்ப் போய் இறங்கினரே
யாழ்நகர்க்கே!
தாயகமே, யாழ்நகரே பாதை
திறந்தனர் பாருங்கள்!
பாதைகளைப் போட்டவர்கள் நாங்களுங்கோ?

எங்களுக்காய்த் திறக்கின்றார் எங்களூர்ப்
பாதைகளை!
பாருங்கள் பாதை திறக்கிறது.
செவ்வாயில் குடியேறி நீர் எடுக்குமட்டிலும்,
நிலா மண்டபத்தில் கவியரங்கு நடத்து
மட்டும், அளவெட்டி தொடக்கம் பலாலிப்பாதை
திறக்காது. இருந்திருந்து பாருங்கள்!

****

ஒரு கிலோ சீனிவிலை 9 ஆல்
பெருக்கி வித்து, ஒரு கொத்து
அரிசியினைப் பறைதட்டி
விற்க வைத்தீர் ஒரு நூறாய்!
லாம்பெண்ணை இல்லாது
மின்மினி வெளிச்சத்தில்
வீதிகளில் தூங்கையிலே
சோப்பொன்று இல்லாமல்
பனங்காய்க் காடிகளில்
வேட்டியினைத் தோய்க்கையிலே
ஒரு மக்கள் நாமென்று
குரல் ஒன்று எழுப்பாமல்
குந்தியிருந்து சலுகைகளை
ஏந்தி நின்ற குரங்குகளே!
கோமாளிக் கோட்டான்
குடிப்பிறந்த லஞ்சமதின்
புதல்வர்களே; பாதை
திறந்தனரே பாருங்கள்.
ஷெல்லடிச் சீரழிவில் வீடுகளை
விட்டிங்கு நாமோட
அந்த வீட்டில் ஆமி புக,
கறையான் புற்றினிலே
பாம்பொன்று புகுந்ததையே
பாமரத் தமிழனிவன்
வீடு பாக்க அங்கு போக
காத்திருந்த ஆமி அவன்
கணக்காகக் கிணத்தினிலே
தள்ளிவிட, எழும்பாகக்
கிடக்கிறான் அப்பாவித்
தமிழனிவன்!

அவன் பாவித்த
பொய்க்கால் ஒன்றும்
அவனுடனே அக்கிணற்றில்
மீட்கப் படுகிறது.
ஐயகோ.... எலும்பான

பாதை திறந்ததடா...
கிணத்தடியில் முகம் கழுவி
ஆலம் விழுதெடுத்துப்
பல் துலக்கிப் புறப்படடா
யாழ்ப்பாணம்.
பாருங்கள் பாருங்கள்
பாதை திறந்தனரே!

****

திருமலை எண்ணெய்க் குதத்தினை
பருந்தினுக்குக் கோழிக் குஞ்சினைக்

கொடுத்தது போல் கொடுத்தாரடா
கொடுத்து!
வானையும், கடலையும் அமெரிக்க
நாட்டுக்கு அடைவாகக் கொடுத்து

புரிந்துணர்வு ஒன்றையே
புலிகட்குக் கொடுத்து
இனிய மக்களாம் இலங்கை
மக்கட்கு விளக்குமாறு, குஞ்சத்தடி
தருவதாக வாதிடும் பேரின அரசு
பாருங்கள்..... பாருங்கள்.... பாதை திறந்தனரே!
அல்லைப் பிட்டியிலும் அருமையான சாட்டியிலும்
அடுத்த ஊர் முட்டாசிச் சந்தையிலும்
முற்றுவெளிப் பக்கமாக இருந்த
கடைகளிலும் தமிழ்பேசும் மக்களாக
நாம் வாழ்ந்தோம் முஸ்லீம் சகோதரனே.
பேரினத்தர் செய்து நின்ற
பெரும் துரோகம் ஒன்றினிலே
வீரமுனை தொடக்கம், திக்கமுனை ஈறாக
நாம் பிரிந்தோம் சூழ்ச்சியாலே!
சூழ்ச்சிகளால் வலை பின்னும்
துரோகதை அறியாமல்
ஒருவர் ஒருவராக நாமெடுத்தோம்
கத்திகளை!
இனிமேல் இப்படி நடக்காதெனக்
கொண்டு தாயகம் எமக்கும்தான்
வடக்கென்று கொள்ளுகிற
முஸ்லீம் சகோதரனே
நீங்கள் போவதனால்
நானும் வருகிறேன்
பாருங்கள்! பாருங்கள்!
பாதை திறந்தனரே.

***

நெல் கொண்டு போகுமட்டும்
நில்லாய் நெடுஞ்சுவரே என்றிங்கு
சொன்ன அக்கம்பரைப்போல்
இலக்கணத்தில் வித்தகத்தைக்
காணுகின்ற பண்டிதரே

இலக்கணமோ, கருத்துக்களோ
சரியில்லை எனக் கொண்டால்
வாதுக்கழை, வையகத்தில்
வசைகள் செய்! அஞ்சமாட்டேன்.

தமிழ் வணக்கம்.

தமிழ் வண்டு

***

**மருதமுனை மருதூர் வாணர் தலைமையில் அரங்கேறாத ஒரு கவியேறாத கவியரங்குக் கவிதையிது.**

# வாசிக்க வைத்து யோசிக்க வைத்த கவிதை

## மரமாயிரு!

சிறகுகளை உடைத்து விட்டு
இறையினிலே அடைத்து விட்டு
கண்ணில் பழக்கத்தைக் காட்டிவிட்டு
வாய்விட்டுச் சிரிக்கும்
இந்தச் சமுதாயம்


வயதை ஏற்றிவிட்டு
அழகைக் குறைத்துவிட்டு
உணர்வை ஒடுக்கி விட்டு
கைகட்டிப் பார்க்கும்
இந்தச் சமுதாயம்

தொடையைக் கிள்ளி விட்டு
தோளிலே கையைப் போட்டு
காலை உடைத்து விடும்
இந்தச் சமுதாயம்

நூறு ஏசுநாதர்
சிலுவையில் அறையும்
நூறு காந்தி பிறந்தாலும்
சுட்டுக் கொல்லும்
இந்தச் சமுதாயம்

இந்தச் சமுதாயத்தால்
உன் கண்கள் என்றும்
கண்ணீரைப் பீய்ச்சிக்
கொண்டே இருக்கும்!
ஆகவே நீயும் ஒரு
உணர்வற்ற மரமாயிரு

சர்மின் தாஜீடின்
களனி
நன்றி-கலைமுத்து



# யுத்தங்கள் வேண்டாம்

செந்துமடியும்
என்
தேசத்துச் சனங்களை
கண்கூடாக கண்டுமா

யுத்தமே
வேண்டுமென்கிறாய்..

பெத்த வயிறுகள்
இங்கே
பித்துப் பிடித்தலைவது
தெரிந்தும் ஏன்

கொலைவெறிப் பிடித்த
கொடுர யுத்தத்தின்
இரத்த வெள்ளத்தில்
கும்மாளமிட
அங்கலாய்க்கிறாய்..?

மனிதன்
வாழப் பிறந்தவன்

அவனை
மரணித்து
மகிழ்ச்சியுற
நினைப்பது

எந்த வகையில்
மனிதாபிமானமாகும்!

பூமித்தாய்
பொறுமையானவள்தான்...

அதற்காக
அறுத்துப்போட
நினைப்பது
பைத்தியக்காரத்தனம் தோழா!

என்
சாந்தகுணம்
சர்வாதிகாரத்தையும்
கொலை வெறியனையும் கூட
வென்று தீர்க்கும்..

சமாதானத்துக்காய்!

உனது
யுத்தம்
சவக்குழிகளை
தோண்டியதே தவிர

பெரிதாய்
வேறென்ன
சாதித்து விட்டது..?

உன் துப்பாக்கிகளுக்கு
துணிச்சல்
இருக்கிறதே தவிர

இரக்கமில்லை!
நல்ல
இலச்சியமில்லை!

வா...?
இங்கே
என்னிடம்
இரண்டும் இருக்கிறது!

கீதையின்
கீர்த்தனைகளை
கிளறிப்பார் ஒருகால்

முரண்டு பிடிக்கும்
முட்டாள்களுக்கு
முதன்மை
வகிப்பதை விட

மனிதத்திற்கு
மண்டியிடுவது
மேலென்றே சொல்லும்!

முதலில்
மனம் திருந்து...

பின்
தவறுகளுக்காய் வருந்து!

யுத்தத்தால்
புதுயுகம்
செய்யாலாமென்ற
புரட்சியின்
மறுபக்கத்தை
புரட்டு...

இப்போது
இனங்கண்டு கொள்வாய்
புரையோடிக் கிடக்கும்
போரின்
போலி வேசத்தை!

அங்கே
போர்க்கருவிகளும்
பொல்லாக் குணங்களும்
தோற்றிருக்காது...

மனிதங்கள்
மட்டுமே
மரணிக்கப்பட்டிருக்கும்!

எழும்புக் கூடுகளை
வேண்டுமானாலும்
எடுத்து
பரிசோதித்துப் பார்...

அவற்றில்
அநேகமானவை

போருக்கெதிராய்
போரிடவே முன்வரும்

அஹிம்சையால்!


உன்
உணர்ச்சி நரம்புகளை
ஒழுங்காக
ஒரு முறை
உரசிப்பார்

அவையும்
சமாதானத்திடம்
சரணபுகவே துடிக்கும்!

யுத்தங்கள்
வேண்டாம் தோழா
சமாதானச் சத்தத்தின் விலங்குகளை விடுவி!

**மலைக்குயில்**
**து.பிரபாஹர்**
**ஹப்புத்தளையூர்.**

++++++++++++++++++++++++++



# காதல்

காலை மலர்கையிலே பூவுக்கு
வண்டு சொன்னது காதல்
மாலை மலர்கையிலே மனித
இனத்துக்கு நிலவு சொன்னது காதல்

காலை மலர்கையிலே கைக்குழந்தை
தாய்க்கு சொன்னது மழலைக் காதல்
மாலை மலர்கையிலே காதலன்
சொன்னது மன்மதக்காதல்

உலகக் காதலில் உயர்வான காதல்
அன்றில் அளித்த அன்றைய காதல்
'கையது பொத்தி மெய்யது விதிர்த்த'
கவிதை வரிகள் சங்கக் காதல்

சோடி உதிரும் இரத்துக் காதல்
உலகம் கண்ட இழிவுக் காதல்
சோடி பிரியாப் புறாக்கள் வாழ்வு
வாய்மை நிலைக்கு நிறைவான காதல்


சிலம்பு கொண்ட கோவலன் வாழ்வில்
முத்தி நின்றது அவசரக் காதல்
புலம்புகின்ற அமரா வாழ்வில்
அம்பிகாபதி, திரைமறைக் காதல்.

சீதனம் வாங்கிச் சிரிக்கும் மடையன்
ஆதனம் போற்றும் அடிமைக் காதலன்!
இனாங்கள் வாங்கி முத்தம் கொடுத்தால்
இதுவன்றோ உலகில் இழிசனக்காதல்

தாமரை முகத்தில் தவளை பாய்ந்தால்
தாமரை மலர்தான் கற்பினை இழக்குமோ?
சாமரை வீசும் மன்னவன் ஆணையில்
தாமரை மலர் போல் காதல் பூக்குமோ?

திறந்தமேனி கையிலே ஒரு பூ
ஓவியம் ஒன்று சிரிக்குது சிகிரியில்
அம்மணி மறைக்கும் அரை உரு மேனியில்
பிறக்குமே எனக்கொரு கலை உருக்காதல்

றோமியோ யூலியட் மேல் நாட்டுக் காதல்
லைலா,மஜ்னு இந்தியக் காதல்
சாஜகான்,மும்தாஜ் பளிங்குக் காதல்
படைப்போம் நாம் ஒரு சுதந்திரக் காதல்



## கழுவுங்கள்

காலையில் எழுகிறீர்
மாலையில் துயில்கிறீர்
இடையிலே எத்தனை
வேலைகள் உம்தனக்கு!
காலையில் எழும்பி
கைகளைக் கழுவுகிறிர்
கால்களைக் கழுவுகிறீர் அலம்பிறீர்
முகம் கழுவி
முத்தான பற்களையும்
கழுவுகிறீர் நீர் கொண்டு!
வாய்களைக் கழுவுங்கள்
இன்னுமொரு நீர் கொன்டு
எனென்று தெரிகிறதா?
ஆமாமா......நேற்று
நீங்கள் சொன்ன
பொய்யெல்லாம் மண்ணோடு
மண்ணாகப் போவதற்கு

தமிழ்வண்டு

## பிடி மண்

பிரபா வீட்டில்
பிடிமண் எடுக்கும்
பேரினத்தீர்!
எம்முரு மண்ணேல்வாம்
நீர் பிடித்து
எங்களையே எம்மண்ணில் புதைத்து
அகதியாக்கி
ஆட்டைக் கடித்து
மாட்டைக் கடித்து
மனிதர்களைக் கடித்த
மாமடையீர்'
தமிழனைக் என்றென்றும்
கடிப்பதற்கு
முடியும் என்று
காணாதீர் கனவு!
பிரபா வீட்டில்
எடுத்த மண்ணை
அங்கேயே கொட்டி
நடந்திடுவீர்
நல்ல பிள்ளையாக!
இது எங்கள் மண்
செத்துப் பிறந்தாலும்
சொந்த மண்



தமிழ் வண்டு

## ஆயுள் முடிகிறது

ஆயுள் முடிகிறது
ஆயுள் முடிகிறது
இப்போதான் வந்த
பாதை புரிகிறது

ஆயுளின்பாதி
பாயில் முடிகிறது இப்போது
பாதை புரிகிறது

ஏங்கிய ஆசைகள்
நிராசையில் முடிகிறது இப்பொது
பாதை தெரிகிறது!

பொய்யான வாக்குறுதி
தந்தவர்கள் குரல்கள்
காதொலியில் கேட்கிறது!
இப்போது பாதை
புரிகிறது?

கண் இரண்டும் சொருகிக்
கட்டிலிலே கிடைக்கையிலே
குத்து விளக்கெரியக்
கும்பிட்டுக் கடன்காரன்
வருவது, போவது, போட்டானே
எனப் புலம்புவது காதொலியின்
உள் ஒளியில் கனிவாகக்
கோட்கிறது

சுகமாகப் போ என மண்கரைத்து,
பொன் கரைத்து,பெண் ஒருத்தி
வாயருகில் வைத்துக் குடிங்'கோ'
எனச்சொல்வதும் சோக்காக
என் செவிப்பறையில் சோ என்று
விழுகிறது

சித்திரனும் புத்திரனும் எருமையில்
வந்திங்கு பாசமாம் கயிறெறியப்
பக்குவமாய் ஒளித்தின்று
சுருக்குக் கயிறொன்றை மாட்டுவது
அற்புதமாய்,மங்கல் ஒளியினிலும்
மயிர் இழையில் தெரிகிறது

பாலுக்குப் பாலகன்
வேண்டி அழுதிட
பக்குவமாய்ப் பால்முலை
தந்து நின்று
பார்வதிப் பிள்ளையும்
என்னையும் என் உயிரையும்
கைவிட்டு விட்டது
நன்றாகத் தெரிகிறது

இந்த நிலையிலும்
கள்ள உறுதிகள்
நான் எழுதிக் கடைசியிலே
அதை வித்து
நான்பெற்ற குமார்களுக்கு
சீதனமாய்க் கொடுத்ததுவும்
இனாமாக இறைத்ததுவும்
இங்கிதமாய் தெரிகிறது

மூலைக்காணி இரண்டொண்றை
வித்துச் சா செலவு
கல்வெட்டு, மரணச்சடங்குகளை
ஒழுங்காக நடத்து எனக்
கடைக்குட்டி சோமனுக்கு
எழுதியதும் கண்மூடும் நேரமதில்
சரியாகத் தெரிகிறது

ஆனாலும் எனக்கின்று
ஒன்றும் புரியவில்லை!
ஒளியாமல் சொல்லுகிறேன்
எதுக்குத்தான் இவ்விடத்தில்
இளைய தலைமுறை
உயிர் கொடுத்துப்
போராட்டம் இவ்விடத்தில்
செய்கிறது!
என்உயிர் பிரிகிறது
மிகுதி நான் பிறப்பெடுத்து
உவ்விடத்து வந்த பின்னால்
அந்நாள் வரும்வரைக்கும்
இனிய தமிழ் வணக்கம்

**யாழ்ப்பாணன்**

## ராகங்கள்; ரகசியங்கள்



திருநீலகண்டர் படத்தில் 'மறைவாய்ப் புதைந்த ஓடு' என்று பாகவதர் பாடிய போது அந்தப்பாடல் என்னை மிகவும் கவர்ந்தது. அது தர்பார் ராகம் எனப் புரிந்து கொண்டேன்; கண்ணகி 'படத்தில் பி.யூ. சின்னப்பா' மனமெல்லாம் போனபின்பு எனப் பாடிய பாட்டு மிகவும் உருக்கமாக இருந்தது. பின்பு அது சாமா ராகம் எனப் புரிந்து கொண்டேன். சொர்க்க சீமாவில் பி. பானுமதி பாடிய பாட்டு ஒன்று மிகவும் சுகமாக இருந்தது. என்ன ராகம் என்று விசாரித்தபோது அது ஆனந்த பைரவி எனப் புரிந்து கொண்டேன். ரசிக்க ஆரம்பித்தால் ராகங்கள் அத்துபடியாகி விடும். இது என்னுடைய அனுபவம்.


**-பி.சி. கணேசன்-**

## விதி

தேனீர்க் கூட்டங்கள்
பேணி உயிர்காத்த
தேனை அறுத்தெடுப்பதேன்?
சில
பானை நிறைத்தெடுப்பதேன்?
பலர்
வாயில் தேன் சுரக்க
தீயில் தேனீயிறக்க
இறையின் விதியாவதேன்?
இது
தரையில் சதியான தேன்?

சோலை மலரெல்லாம்
காலைப் பொழுதிற்குள்
வாழ்வைக் கொடுத்தாவதேன்?
பல
மாலை தொடுத்தாவதேன?
இந்த
கொடுமை மலருக்கு
அடிமை வாழ்வமைத்த
இறையின் விதியானதேன்?
இது-
தரையில் சதியானதேன்?

எம்.ஏல்.ஜவ்பர் சாடீக்
காத்தான்குடி



## பஞ்சுப்பூ

காதில் வடிந்தது சீழ்
ஆ அதில் வைத்தேன்
பஞ்சுப் பூ
வந்தது வந்தது
புரிந்துணர்வு?
வைக்கின்றார் துப்பாக்கி
வாயில் பஞ்சுப் பூ
விளங்கவில்லை இன்னும்?
துப்பாக்கிக்கிக்கு வந்ததோ
காதில் சீழ்?

தமிழ் வண்டு

மறு பிரசுரம்

# இன்றைய இலங்கைத்தமிழ்க் கவிதையின் நவீன போக்குகள்

பொதுவாக இன்று இலக்கியத்தின் எந்த வடிவமும் உலக இலக்கியங்களுடன் இணைந்து மரபு மாற்றம் பெற்றுள்ளதையும், பெறுவதையும் நாமறிகிறோம்.
தமிழ்க் கவிதையின் போக்கும் இந்த வீதியில் நடைபோட்டு மாற்றம் பெற்றிருப்பதையும் மேலோட்டமாக மட்டுமல்ல ஆழமாகவும் ஆய்ந்துணர
முடியும்.

தமிழில் சங்க இலக்கியத்திலிருந்து கவி வடிவம் எவ்விதம் துவங்கியதென்பதையும் மரபு ரீதியாகப் பா வடிவங்கள் எப்படி மாறியதென்பதையும் பொருள் வேறுபட்டு வளர்ந்த முறையையும் வரலாறுநமக்கு அறிவிக்கின்றது.

தமிழ்க் கவிதைகளின் போக்கு பொருள்மாறியபோதும் யாப்பில் அடக்கத்துடன் வளர்ந்துவந்ததை மகாகவி பாரதி வரை அறிகின்றோம். மகாகவி பாரதியும் யாப்பு அணியிலிருந்து முற்றாக மாறியதாகத் தெரியவில்லை.

ஒரு விடயத்தை விளக்குவதற்கெனக் கையாளும் வசன நடையை, உணர்ந்து ஊகித்துப் பன்முகக் கருத்துப் பெறுமளவில் கவிதைக்குப் பயன்படுத்திய வல்லமை பாரதிக்குண்டு. தமிழ்க் கவிதைப்போக்கை உலக கவிதைப்போக்குடன் இணைத்து நின்றதிலிருந்து, தமிழ்க் கவிதைப்போக்கே மாறுபடுவதையும் உலகக் கவிதை வரலாறு எமக்கு எடுத்துக் கூறும். பாரதியின் வசன நடை கவிதையின் இறுக்கம் அழுத்தமான தொனி என்பவற்றை இணைத்துநிற்பதைக் காணச்செய்யும்.பாரதி நவீனக் கவிதைப் பேக்கின் ஆரம்பப்புள்ளி என்பதை யாரும் மறுத்திடமாடார்.
இத்தெடர்ச்சியில் தமிழ்நாட்டிலும் , இலங்கையிலும் , நவினத்தமிழ்க
கவிதைப் பேக்கில் எவ்வித பாதிப்புமற்று பழையகவிதை மரபின் துவானமாகவே அனேக கவிஞர்கள் இன்றுவரைக் கவிதைகள் படைக்கின்னர்.
சி.சு.செல்லப்பாவின் (எழுத்து) புதிய கவிதை மரபென்றை மேல் நாட்டிலக்கியத் தாக்கத்தால் எற்படுத்தியது. அது வசன கவிதை முயற்சிக்குக் காலாகியது. உண்மையில் வசனகவிதைப் பரபரை ஒன்றை(எழுத்து)தோற்றுவித்ததால் தமிழ்ககவிதைப் பேக்கு வேறெரு திசையில் வீறுநடை போட்டதை நாமறிவோம். இக்கவிதைகள் யாவும் அகதுண்டலை நம்பியே இயக்கி நின்றன. இக்கவிதைகள் ஜனரஞ்சகமாகாமல் போவதற்கு இதுவே காரணம்.
வசனக்கவிதையை இலேசாக்கித் தன்னுணர்ச்சிப் பாடல்களாக(வானம்பாடி)கள் பாடி மகிழ்ந்தனர்.

அகத்துாண்டலையும் தன்னுணர்ச்சியையும் தனிமனிதப் பேராட்டத்தையும்பெருளாகக் கொணடுபுதுகவிதைகள் எழுந்தால் மனிதன் சமுகம் வாழ்க்கை என்பன மறக்கப்படுகின்றதே எனும் உணர்வு மேலெழுந்தது.
இப்படியான புதுக்கவிதைப் போக்கை க.கைலாசபதி.
வானமாமலை போன்ற முற்போக்காளர்கள் எதிர்த்தனர்.
இவர்களின் எதிர்ப்பின் பயன் .புதுக்கவிதை சமுதாயம்
இயக்கம்.உழைப்பு பற்றிய பொருள்களில் பாட எத்தனித்தது. அத்ன்பின் க.கைலாசபதி வானமாமலை போன்ற முற்போக்காளர்கள் புதுக்கவிதை உருவத்தை ஆதரித்தனர்.
தேசிய இயக்கவழியில் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தை ''சுதந்திரன்'' ஆரம்பித்த காலத்தில் இ.முருகையன், அ.ந.கந்தசாமி போன்றவர்களே மக்களுக்கு விளங்கும் மொழியில் கவிதை படித்தனர். அ.ந. கந்தசாமியின் ''கடவுள் என் சோர நாயகன்'', ''மீனினத்து வீதியெல்லாம்.....'' எனத் தொடங்கும் கவிதைகள் கொடிகட்டிப் பறந்தன. புதுவை ரத்தினம், சாருமதி போன்றோர் இந்த வழியில் நின்றிலங்கினர்.

''இ. முருகையன், தான்தோன்றிக்கவிராயர், மகாகவி, கந்தவனம், இ. நாகராஜன், கே.சி.எஸ்.அருணாசலம், பாட்டாளிப்பாலன் இரத்தினசிங்கம், நீலாவணன், பசுபதி, ஏ.இக்பால், பண்ணாமத்துக்கவிராயர், புதுவைரத்தினம் இன்னும் பலர் இன்றைய பிரச்சினைகளை விளங்க வைக்கும் கவிதைப் போக்கைக் கைப்பற்றினர்'' என அனந்த சுப்பிரமணியம் 06-11-1993 இல் வீரகேசரியில் எழுதிய ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

புதுமையான புனைவுதான் மற்றவர்களிடமிருந்து மாறுபட்ட இலக்கியத் தனமையை வெளிப்படுத்தும். இவ்விதச் சிந்தனையை கவிதைப் போக்குக்குத் திரும்பிவிட்ட பெருமையை 1969களில் வெளியான எம்.ஏ.நு.ஃ. மானின் ''கவிஞன்'' ஏடுதான் ஏற்படுத்தியது.
கவிதைப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தை சண்முகம்சிவலிங்கம், எம்.ஏ.நு.ஃ.மானின் கவிதைகள் கூறுகின்றன.

சாதாரணமாக அநுபவித்தறிந்தபோது, ஏற்பட்ட அசாதாரண படைப்புக்கள் எம்.ஏ.நு.்.மானின் ''கவிஞன்'' கவிதை ஏட்டுக்குப் பின்தான் இலங்கையில் எழுந்தன எனலாம

வளம் நிறைந்த புலமைப் போக்கை வலிந்த மொழியில் சேர்க்காது, இயல்பாகப் பேசும் மொழியில் அப்புலமைப் போக்கு கவிதையாக எழத் தொடங்கியது. படைப்பாற்றலுக்கு உதவும் சூழல் காரணிகள் எளிதாகக் கவிதைகளை வெளியாக்கி நின்றன.

இந்தப்போக்கு மரபு ரீதியாக இலக்கணத்தை ஏற்காததினால் எதிர்ப்புகளும் கிளம்பின. புலவர் ஜின்னா ஷரிபுதீன் போக்றோர் ''மரபு வழிதொடர்லோம்''

எனப் பிரசாரம் செய்தபோதும், புதிய போக்கின் தீவிர வளர்ச்சி தடைப்படவில்லை

இலகு தமிழில் பேசுவதுபோல் எழுதும் கவிதைப்போக்கு மிகவும் விசாலமாகப் பரவியது.

உலகத்தில் நடந்த பல போராட்டங்களின் பின்விளைவுகள் பேசுவதுபோல் எழுதும் கவிதை மரபுக்கு உறுதுணை செய்ததெனலாம். 1917இல் நடந்த ருஷ்யப்புரட்சி, அதனால் வெளிவந்த விளாடிமிர் மாயகோஸ்க்கியின் கவிதைகளின் தாக்கம், ஜப்பானிய ஹிரோசிமா அணுகுண்டுத் தாக்கத்திற்கு முன்,பின் எழுந்த கவிதைகளின் தாக்கம், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் விளைந்த கவிதைகளின் தாக்கம், பாலஸ்தீனப் போராட்டத்தில் விளைந்த கவிதைகளின் தாக்கம் யாவும் தமிழ்க்கவிதை உலகையும் தாக்கி நின்றது. போர் மீது போர் தொடுத்த கவிதைகளின் போக்கு இலங்கைத் தமிழ்க்கவிதையின் போக்கையும் மாற்றி நின்றதெனலாம்.

இந்தவழியில் இலங்கையில் ஜெயபாலன், சண்முகலிங்கம், சேரன், எம்.ஏ.நு.்.மான், ரஸ்மி, இளைய அப்துல்லாஹ், திருமாவளவன், ஷகீப், விஜயேந்திரன், சோலைக்கிளி, அஷ்வக்கோஸ், என்.ஆத்மா, சிவசேகரம், வில்வரத்தினம், மு.பொன்னம்பலம் போன்று இன்னும் பலர் இதேபோக்கில் எழுதும் கவிஞர்களாகப் புதிய போக்கினில் செல்கின்றனர்.

இலங்கையில் 1.போராட்டப் பிரதேசங்கள். 2.வெளியேயுள்ள பிரதேசங்கள், 3.புலம்பெயர்ந்தோர் வாழும் பிரதேசங்கள் யாவும் புதுமையான, சுதந்ததிரமான, இயல்பான கவிதைகளைத் தமிழ்ல் கொட்டின. இந்தக் கவிதைக் குவியலைத் தெரிந்து கொள்வதினால் , இன்றைய கவிதைப் போக்கைக் கணக்கெடுக்கலாம். இந்த புதிய போக்கினையுடைய கவிதைக்குவியலுக்குரியவர்கள் நான் முன்கூறிய கவிஞர்கள்தான் என்பதை அடையாளங்கூறுதல் அவசியம்.

இன்னுமொரு முக்கிய விஷயம் இலங்கைக் கவிதைப்போக்கில் புதுமையையும் சுதந்திரப் பார்வையையும் செலுத்தியோர் பலருள் இ.முருகையன், இ.சிவானந்தன், சிவசேகரம், விஸ்வரத்தினம், சேரன், சண்முகலிங்கம்,ரஸ்மி, என்.ஆத்மா,ஷகீப், இளையஅர்துல்லாஹ் போன்றோர் விஞ்ஞானக் கல்வித்தேர்ச்சி பெற்றோர். இவர்களது கவிதைப்போக்கு முற்றிலும் புதுமையும் வளமுமுள்ள அறிவுசார்ந்த போக்கென்பது எனது அபிப்பிராயம்.

இன்றைய தமிழ்க் கவிதைகளில் வாழ்வின் தரிசனங்கள, வாழ்வின் இயல்புகள், கதை நாடகங்கள், உவமை உருவகங்களை உதறிக்கொள்ளும் தன்மைகள், தன்னை மறைத்து நம்மைத் திகைக்க வைக்கும் அதிர்ச்சியும், ஒன்றைச் சொல்லி இன்னொன்றை உணர்த்தும் தன்மைகள், ஒருங்கிணைந்து ஒன்றாயக் காட்சி தரும் புலப்பாடுகள், பேசாதன பேசும் பான்மைகள் யாவற்றையும் சொற்களைக் கடந்து செல்லும் இயல்பையுடைய போக்கைக் காணலாம்.

போராட்ட பிரதேசங்களின் தலைமை வன்னிக்கேயுரியது. வன்னியில் அண்மையில் வெளியான ''ஆனைஇறவு'' கவிதை நூல், போராட்டத்தின் கெடுபிடியையும், மக்களின் அவஸ்தையையும் எடுத்துக்காட்டுகின்றது. போராட்டம் பற்றிய கவிதைகள் யாவற்றையும் கவிஞர்கள் பார்வையாளர்களாக நின்றும் பங்கு கொள்ளும் மனப்பான்மையுடனும் எழுதியிருக்கின்றனர் மொழியை வீசியெறிந்து சுதந்திரமாகப் பேசும் கவிதைகள் இவை. இதுதான் இன்றைய தமிழ்க் கவிதைகளின் போக்கு. வெளியேயுள்ள போர்ப்பிரதேசமற்ற பகுதியில் பெயர்ந்தோர் அநுபவம் சட்டியில் இருந்து அடுப்பில் விழாமல் அடுப்புக்கல்லில் விழுந்த கதை போன்றது. இந்தச் சட்டி, அடுப்பு, அடுப்புக்கல் மூன்றின் விவரணமும் இவர்களின் கவிதைகளில் தொனிக்கின்றன.

இன்றைய கவிதைப் போக்கைச் சிற்றேடுகளும், வீடியோ, ஓடியோ நாடாக்களும், கவிதைத்தொகுதிகளுமே புட்டுக்காட்டுகின்றன. சிற்றேடுகள் கலைசார்ந்த அணுகுமுறைகளையும், இலக்கிய அர்ப்பணிப்புகளுக்கான செயற்பாடுகளையும், உலக இலக்கியத்தைப் புரியச் செய்வதையும், உயர்ந்த இலக்கியத்தை உருவாக்குவதையும் பிரக்ஞை பூர்வமாகத் தளமமைத்துச் செயற்படுகின்றன.

தேசிய ஊடகங்களெனக் கூறப்படும் தேசியப்பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகள் இன்றைய கவிதைப் போக்கை முற்றிலும் அறியாக் குருட்டுத்தன்மையுடன்தான் நிற்கின்றன. இவ்வூடகங்களை மீறி, இன்றைய கவிதைப் போக்கு தொலை தூரம்வரை பரந்து விரிந்துவிட்டது. ஊடகங்கள் பாமர மட்டத்தை உயர்த்தும் இலக்கியப் பணியினைச் செய்வதேயில்லை.

இன்றைய கவிதைப்போக்கின் எடுவிடிதான் பெண்ணியவாதம் சார்ந்த கவிதைகள் எனலாம். இதுவும் ஒரு போராட்டந்தான். ஆழியாள், சங்கரி எனும் சித்திரலேகா, ஸுல்பிகா, ஔவை போன்றோர் மிகச் சுதந்திரமாக வீச்சும், பேச்சும் நிறைந்த தமிழில் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளனர். இவர்களது கவிதைகள் ஏதோ ஒரு போர்ச்சூழலில் நின்று பாடுவதுபோல் இவ்விதம்தான் செல்வதையும் நாம் உணரலாம்.

அ) சு.வில்வரத்தினத்தின் 'குமரி நமஸ்காரம்' எனும் கவிதை
ஆ) திருமாவளவனின் 'புதிர்' எனும் கவிதை
இ) சி.சிவசேகரத்தின் 'யாதும் ஊரே' எனும் கவிதை
ஈ) சேரனின் 'சிம்மாசனமும் சவப்பெட்டியும்' எனும் கவிதை
உ) வ.ஐ.ச.ஜெயபாலனின் 'எட்டாவதுபேய்' எனும் கவிதை
ஊ) எம்.ஏ.நு.'.மானின் 'புத்தரின் படுகொலை' எனும் கவிதை
எ) என்.ஆத்மாவின் 'ஆணலைகள்' எனும் கவிதை
ஏ) ஏ.இக்பாலின் 'போதும் என்ற மனமே போதும்' எனும் கவிதை
ஐ) சுல்பிகாவின் 'பெண்' எனும் கவிதை
ஒ) ஔவையின் 'வீடு திரும்பிய என் மகன்' எனும் கவிதை
ஓ)சோலைக்கிளின் 'எனது உள்ளங்கையில் நான்' எனும் கவிதை
ஔ) சண்முகம்சிவலிங்கத்தின் 'அவள் நினைவு' எனும் கவிதை

இன்றைய தமிழ் கவிதைப் போக்கிற்கு உதாரணங்களாகக் கூறலாம். இவ்விதம் எத்தனையோ கவிதைகளையும் கவிஞர்களையும் தரமுடியும். விரிவஞ்சி விடவேண்டியுள்ளது.

நவீன காலநோக்கில் ஆற்றல் மிக்கக் கூறுகளை ஆக்கக்கூறுகளாக்கி வாழ்வுக்குப் பொருத்தமாக்கும் உயர்கவிதைகளை தமிழ் மொழியை வாலாயமாக்கியவர்கள் சுதந்ததிரமாகவே ஆக்கியுள்ளனர். ஆனால், மொழிவளச் செல்வத்தினால் ஒரு கவிதை உருவத்தை உயர் நிலைக்கு ஆக்குவதில் மொழி அதிகமறிந்தோர் தம்மையும் மறந்து செய்துவிடுவர். அப்படிச் செய்தாலும் சுதந்திரக் கவிதைப் போக்கு அதில் தொனிக்கும். இந்தப் போக்கு இன்றைய தமிழ்க் கவிதையில் நிலைத்து நிற்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

எங்கள் கவிதையில் எந்த வடிவமுமில்லை என்று கூறுவோரது கவிதைகளில் ஒரு வடிவம் இருப்பதைத் தானாகவே மறந்துவிடுகிறார்கள். ஒரு மிகப் பழைய இலக்கணவாதி 'தற்காலக் கவிதை யாவற்றிலும் இலக்கணமுண்டு' என்று கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.

யார் எதைத்தான் கூறியபோதும், இன்றைய தமிழ்க் கவிதையின் போக்கு புதுமை நிறைந்ததே. சுதந்திரமான பார்வையுடையதே. அநுபவத்தின் கீறுகளும், அதிர்ச்சியான இயற்கைப் புனைகளும் அடங்கியவையாகப் பார்வை புதுக்கிப் பறந்து செல்கின்றதெனலாம். இது வளர்ச்சியின் கூறுதான். காலந்தால் இதைக் கட்டிக்காத்துச் சொல்லும்.

ஏ.இக்பால்
நன்றி- ஞானம்

## ஏழை

அ ன்பு தெய்வம் தாயே !
ஆ ளாக்கியவளே
இ தய தெய்வம் தாயே!என்னை
ஈ ன்றவளே!
உ யிர் கொடுத்த தாயே!
ஊ ட்டி வளர்த்தவளே!
எ ன்னை பெற்ற தாயே!
ஏ ன் என்னை பெற்றாய் ஏழையாக!...

**R.சிசுபாவன்**
**பண்டாரவளையூர்**

நாத்திகனுக்கு
தினசரி சாமி தரிசனம்
வீட்டெதிரே கோவில்

முத்து ஆனந்த்

மேகலை வாணி

# ஒ....பெண்ணே!

பெண்ணே அவன் உன்னைப் பார்க்க விடு.
சிரியாதே போக விடு.
அவன் யார் என்று ஆய்ந்து பாரு!
சிரியாதே யாரென்றி அறிந்தபின்னால்
கசடன் என்று அறிந்தால் மறைந்து விடு
சிரியாதே போக விடு.
ஆராயமுன்பு மடல் எழுதி அனுப்பாதே!
மடையன் மடல் எதுவும் வாங்கி முடக்காதே!!
சிரியாதே போக விடு.
பெண்ணே அவன் உன்னைப் பார்க்க விடு.
அவன் தாயை யார் எனறு முகர்ந்து பாரு.
சிரிப்பினிலே நேர்மை உண்டா? உன்னுடனே
உணர்ந்து பாரு

தேரை தேய்ந்த தேங்காய்போல
உள்ளம் உண்டா அறிந்து பாரு!
இனம் காட்டும் முன்னாலே
சீதனத்தக்கு அலையும் ஒரு
சுந்தர வேலவனோ,தூதுவிட்டு
அறிந்து கொள்ளுடி
அதன்பின்பு
எழுது ஒரு க-டி-த-ம்

தினாவானா

# சமாதானமானது !

உலகம் ஒளியானது; உலகம் இருளானது
இதில் எதுதான் சரியானது?
அலசில் பாதி உண்மையானது
மொத்தத்தில் இரண்டுமே சரியானது
வேற்றுமையில் ஒற்றுமை ஒன்றானது
அதுவே உலகில் நிலையானது
காலையும் மாலையும் வருவதானது
அலையும் கரையும் இருப்பது போல்வது

கண்ணில் கருமுழியும்,வெண்பரப்பும்
இருப்பதானது;
ஒற்றுமையில் இரு வேற்றுமை
நடப்பதானது;
கண்மணி ஒரு புறம்;வெண்மணி மறுபுறம்
சொல்வதாவது;
உலகம் என்பது பன்மையானது;நாமக்கே
இருப்பதானது;
ஒருமையானது; ஒருமைப்பாடானது

கரும்பலகை கறுப்பானது;எழுதுகிற வெண்கட்டி
வெழுப்பானது!
காணுகிற எழுத்துக்களோ வெண்மையானது
கரும்பலகை மாத்திரமே கறுப்பானது
நாமிங்கே படிப்பதானது கறுப்பினிலே
வருமொரு சமாதானம் எனவிங்கு
சொல்வதானது

வானவில் வானவில் ஏழு நிறமானது
எந்த நிறம் அதிகம் பதிவானது
வானமே சாட்சியாகக் கோடுகள்
சமானமானது
ஆகையால் ஒருவர்க்கு ஒருவர் நாம்
எமனாவது
என்றுமே அழியவேண்டும்
உண்மையானது

உலகிலே பல மதங்கள்-இவ்
உலகிலே உள்ள சிறுமதங்கள்
ஒன்றையொன்று மோதி
அழியவில்லை பெரியோரே!
இந்து என்றும்;இஸ்லாமென்றும்
கிறிஸ்தவமாய் வாழ்கின்ற
யூறோப்பா மக்களுமே
மதங்களைப் பேணிப் படிக்கிறார்
மார்க்கமாம் நூல்களிலே
ஆனாலும் இவர்கட்கு ஒற்றுமையாய்
வாழ்வதற்குத் தெரியவில்லை
சத்தியமாய்!

குஜராத்தில் தீசிவனப்படும் மொலுக்காசில்
அயர்லாந்தில் கொல்லுகிறார் ஆளையாள்
இவர்களெல்லாம் ஏளையாள்?
இவர் விதிக்கு ஆண்டவனே
யார் பொறுப்பு?
முகம்மது நபியாகச் சிந்தித்து
இத்தினத்தில் இத்தீய விளைவுகளும்
தீர்க்கமாய் அறுத்து போக
இறைவனையே இறைஞ்சுகிறோம்.

திக்கவயல் தர்மு

## விட்டில் பூச்சி

பள்ளி அறையில்
விளக்கெரியப்
பார்த்திருந்த
விட்டில் பூச்சிகள்
விளக்கையைத்தச்
சென்றது.
பெருமகிழ்வு
கண்டது

## கவிஞர்கள் யார்?

கவிதை என்பது கட்டற்ற உணர்ச்சி வெளிப்பாடு அல்ல;உணர்ச்சியின் பிடிப்பிலிருந்து விடபடுவதே ஆகும்.

டி.எஸ்.எலியட்

எல்லாக் கவிஞர்களும் வெறிகொண்ட பித்தர்களே

ராபர்ட் பர்ட்டன்

கவிதை என்பது அழகிலுறையும் வாய்மை

கில் ∴வில் லன்

பிறமாந்தரினும் சூரிய தொலை நோக்குடையவன் கவிஞன்.

வேவல் பெருமகனார்.

கவிதை என்பது இயற்கை யழகின் திரைநீக்கம்

கவிஞர் ஷெல்லி

ஆர்ந்தமர்ந்து கருத்திலுருவாக்கப்பட்ட உணர்ச்சி வேகமே கவிதை.

கவிஞர் வேர்ட்ஸ்வொர்த்

தொகுப்பு-சீ.கஜேந்திரன்

## கவி மாத்திரமா இனிக்கும்?

கண்ணிர்ப் புகைக்கண்டுகள் குதிரைகட்கு எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது

ஐப்பான் நாட்டின் தேசிய கீதம் நான்கு வரிகளைக் கொண்டது

உப்பு நிறைந்த நீரைப் பருகும் பறவை பென்குவின் ஆகும்

முதன்முதலில் நினைவு அஞ்சல் வெளியிட்ட நாடு பெரு

உயில் எழுதும் பழக்கத்தை முதலில் உண்டாக்கியவர்கள் ரோமானியர்கள்.

அந்தமான் தீவுகளில் உள்ள மொத்தத் தீவுகள் 204

புளுட்டோ கிரகத்தைக் கண்டு பிடித்தவர் கிளைட் வில்லியம் டம்பா.

முதன்முதலில் பலூனில் பறந்தவர்கள் ஸ்கொட் றேம்ஸ் டைட்லர் இவர் 1784 ஆம் ஆண்டு பலூனில் பறந்தார்.

தொகுப்பு - மேகலை வாணி

## கவிதைகள்

உறைக்குள இருந்தால் தான்
அதற்கு வாள் என்று பெயலா?

புதுக் கவிதை எனும் போர்வாள்
இலக்கண உறையிலிருந்து
கவனமாகவே கழற்றப்பட்டிக்கிறது

சுவர்க் கோழிகள் கூவிப்
பொழுது விடியாது என்பது
புரிந்தே இருக்கிறது

மரபு கவிதைகள்
மண்ணில் இருந்தாலும்
விண்ணை பார்த்துக் கொண்டிருக்கும்
மலர் வர்க்கங்கள்

புதுக் கவிதைகள்
விண்ணில் இருந்தாலும்
மண்ணை பார்த்துக் கொண்டிருக்கும்
சூரிய சந்திரர்கள்

மரபுக் கவிதைகள்
ஜாதகங்கள்
புதுக்கவிதைகள்
முகவரிகள்

எம் புதுக் கவிதை எல்லாம்
பேனாக்கள் என்னும்
சோதனைக் குழாய்க்குள்
சூழ் கொண்ட சிசுக்கள்

குருவிகள்
தொலைக்காட்சிக் கோபுரத்தில்
கூடு கட்டுவதால் மட்டுமே
திறையிலுங் கூடத் தெரியுமா என்ன

தமிழின் பழைய புத்தகக்
கடையில் படிந்திருக்கும் தூசுகளை
நிஜ மகரந்தங்கள் என்று நிருபித்தது
போலும்

முள்ளை முள்ளால் எடுப்பது
முன்னோர் வழிதான்
ஆனால் கண்ணுக்குள் விழுந்த முள்ளக்கு
அந்தப் பழைய தத்துவம் பயன்படுமா?

நன்றி-கவிஞர் வைரமுத்துவின்
கவிதைகள்

தொகுப்பு-சீ.கஜேந்திரன்

# ஒரு யுகாந்திர மனிதர்



வாழும் காலத்திலேயே புகழ் பெற்ற கவிஞர்கள் மிகக் குறைவு. அதில் குறிப்பிடத்தக்கவர், உலகக் கவிஞர்கள் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர் இரவீநதிரநாத் தாகூர் வார். அவரை மகாகவி என்பது மகா பெருத்தம்.

தாகூர் ஒரு இயற்கை உபாசகர். இயற்கையோடு இணைந்த வாழ்கை அவருடையது.அவருடைய கவிதைகள் இயற்கை வண்ணத்தில் நெசவு செய்யப்பட்டவை. அதனால்தான் உலகம் அதனை மிகவும் நேசிக்கிறது. தாகூர் 1861-ஆம் ஆண்டு மே 6-இல்,கல்கத்தாவில் பிறந்தார். வங்காள கலாச்சாரத்தை போற்றி வளர்த்த குடும்பம் அவருடையது. வளமான குடும்பம்.அந்தக் குடும்பத்தில் இருந்து கலைஞர்களும்,இசைஞர்களும் வந்திருக்கிறார்கள். அவர்களில் சிறப்புமிக்கவர் இரவீநதிரநாத் தாகூர் அவர்கள்.
இரண்டு மூன்று பள்ளிக்கூடங்களில் நுழைந்து அதெல்லாம் நமக்கு சரிப்படாது என்று வெளியேறியவர் தாகூர்.

அவருக்குக் கல்வி புகட்டினார் தந்தை தேவேந்திரர்.தாகூருக்கு வங்க இலக்கியங்களும், வடமோழி நூல்களும் அவருடைய சிறு வயதிலேயே போதிக்கப்பட்டன. இலக்கியப் புலமைக்கு அவருடைய சுயமுயற்சியே பிரதான காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.இடைக்கால இலக்கியங்களை அவர் தாமே முயன்றுதான் கற்றுக் கொண்டார். பிற்காலத்தில், அவ்வாறே ஜெர்மானிய மொழியையும் கற்றுத்தேர்ந்தார். பதினேழு வயதில் இங்கிலாந்துப் பயணம். இலண்டன் சர்வகலா சாலையில் அவர் பயின்றது ஆங்கில இலக்கியம்.

தம்முடைய ஐம்பதாவது வயது வரை ஆங்கிலத்தைப் பயன்படுத்தாமல் இருந்த தாகூர், உடல்நலக்குறைவு காரணமாக கடல்பயணம் மேற்கொள்ள நேரிட்டது. அப்போது தம்முடைய கவிதைகள் சிலவற்றை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
புகழ் பெற்ற ஐரிஷ் கவிஞரான ஈட்ஸ் என்பார் அந்தக் கவிதைகளின் அழகிலும், பெருட்செறிவிலும் ஈடுபாடு கொண்டார்.அந்தத் தொகுப்புதான் 'கீதாஞ்சலி' என்ற தலைப்புடன் 1912-இல் வெளியானது. ஈட்ஸ் அதற்கு முன்னுரை எழுதி இருந்தார். கீதாஞ்சலி நோபல் பரிசு பெற்றதை நாம் அறிவோம்.
தாகூரின் குடும்பம் பிரும்ம சமாஜத்தின் பிரதான பங்கு பற்றியது. இராஜாராம் மோகன்ராய்க்குப் பிறகு தேவேந்திரநாத் தாகூர் சமாஜத்தின் தலைவரானார். இந்தியர்களின் அரசியல் சமுக முன்னேற்றத்துக்கு உழைத்த குடும்பம் அவர்களுடையது. இரவீந்திரரின் இலட்சியங்களை வடிவமைத்தது.இராஜாராம் மோகன்ராய் எனலாம்.

பங்கிம் சந்திரரின் தொடர்பில் அந்தக் குடும்பம் இலக்கிய பாதிப்புடையதாயிற்று.
வெள்ளையர்களின் ஆட்சியையும், கலாசார ஆதிக்கத்தையும் எதிர்க்கிற தேசிய இயக்க உணர்வு தாகூர் குடும்பத்தில் ஓங்கி நின்றது. இப்படி. மூன்று வித இயக்கங்களிலும் அந்தக் குடும்பத்தினர் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். அத்தகைய சூழ்நிலையில் வளந்த இரவீந்திரரின் பார்வையும்,நேக்கங்களும் எத்தன்மையதாக இருந்திருக்கும் என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.
இரவீநதிரநாத் தாகூர் ஒரு சிறந்த கல்வியாளர். குழந்தைகளிடம் பேரன்பு பூண்டவர். கிராமப்புற வறுமையை நீக்கவும், எழுத்தறிவின்மையைப் போக்கவும் வழிவகைகளை ஆராய்ந்தார். தேச எல்லைகள் கடந்து அவருடைய மனித நேயம்.

இப்படிப் பன்முக நோக்குகள் கொண்ட தாகூரை மேலை நாட்டு கவிஞர் 'கதே' (Goethe)யுடன் ஒப்பிடுவது சாலப் பொருந்தும். இருவரும் அறிவியலில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர்கள். குறுகிய தேசிய மனப்பான்மையை வெறுத்தவர்கள்.
தாகூர் மேற்கத்திய கல்வி முறையை வெறுத்தவர். அவரே ஒரு கல்விக் கூடத்தை தெடங்கினார். அது 1905-இல் ஐந்தே ஐந்து மாணவர்களுடன் (இருவர் தாகூரின் குழந்தைகள்) ஆரம்பிக்கப்பட்டது. அவருடைய கல்விக்கூடத்தில் நடனம்,இசை,நாடகம்,தச்சு வேலை,நெசவு,தோட்டமிடுதல் என்று போதிக்கப்பட்டது. வங்காளத்தில் புரட்சிகரமான பாடத்திட்டத்தை அவர் அறிமுகப்படுத்தினார்.
மத போதனை, பண்டிகைக் கொண்டாட்டங்கள், இலக்கியம் இவற்றின் துணை கொண்டு

குழந்தைகளை இயற்கையோடு ஒட்டி வளரச்செய்ய வேண்டும்.மனித உறவுகள் மூலம் ஆன்மாவை அவர்கள் உணரச்செய்ய வேண்டும்.இப்படித்தான் தாகூர் எதிர்கால இந்தியர்களுக்காகக் கனவுகள் வைத்திருந்தார்.

தாகூர் அன்று தொடங்கிய கல்வியின் சாரம் குரு-சீடன் இடையிலான உறவு என்றார். வேறு எந்தக் கல்வி முறையும் அதற்கு மாற்றாக அமைய முடியாது என்று நம்பினார்.
தாகூர் அன்று தொடங்கிய கல்விக்கூடம்தான் இன்று 'விஸ்வபாரதி பல்கலைக்கழகம்' என்கிற மாபெரும் கலைக்கோயிலாக உருவாகி இருக்கிறது.
தாகூர் வெறும் கறபனைகளில் உலாவுகிற கவிஞர் அல்லர். மாறுகின்ற பருவங்களின் (Seasons) அழகையும்,காதலையும் மட்டுமே அவர் பாடிககொன்டு இருக்கவில்லை. இவர் விரும்பியிருந்தால் தம்முடைய வாழ்கையை உல்லாசமாக அமைத்துக் கொண்டிருக்க முடியும். அதற்கான வசதி படைத்த குடும்பம்தான் அவருடையது. ஆனால்,தாகூர் தம்முடைய பரம்பரை செல்வங்களுடன் தாம் ஈட்டிய பொருள் அத்தனையையும் (நோபல் பரிசு உட்பட) சாந்தி நிகேதனுக்கே அர்ப்பணித்தார். இந்த நாடு ஏழைகளின் நாடு.விவசாயத்தையே பெரிதும் நம்பி இருப்பது என்பதை அவர் நன்றாகவே புரிந்து வைத்திருந்தார்.

படகில் அமர்ந்து தென்றலையும்,நிலாவையும் அனுபவித்தபடி அவர் கவிதைகள் புனைந்திருக்கலாம். ஆனால்,அவர் யதார்த்தத்தை விட்டு விலகிச் சென்றதில்லை. அவர் தன்னுடைய மகனையும்,மருமகனையும், நண்பர் ஒருவரின் பிள்ளையையும் அமெரிக்கப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி விவசாயக் கல்வி பயின்றுவரச ˙செய்தார்.

அந்நாளில் இந்திய தனவான்கள் தங்களுடைய பிள்ளைகளை ஆக்ஸ்.˙.போட்டுக்கும், கேம்பிரிஜ்ற்கும் அனுப்பி ஐ.ஸி.எஸ் (அரசுப்பணி) மற்றும் பார்-அட் லா (சட்டம்) படிக்கச் செய்வதுதான் வழக்கம். தாகூர் அவர்களே தமது மகனைப் படிக்க வைத்தது இந்தியமண்ணுக்கு டராக்டர்களை அறிமுகப்படுத்தவும், விவசாயத்தில் புதிய உத்திகளை நமக்குப் போதிக்கவும்தான்.

தாகூர் தமது நாற்பதாவது வயதில் தேசிய இயக்கத்தில் ஆர்வம் காட்டினார். இந்திய தேசிய காங்கிரசின் வங்காளப் பிரிவுக்கு தலைவராகவும் இருந்தார். அவருடைய பேச்சுகள் தேசிய அளவில் விவாதத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. நம்முடைய பாரதி மாதிரி பாட்டுக்கள் மூலம் நாட்டுப் பற்றை ஊட்டவும்செய்தார். வங்காளத்தில் பயங்கரவாதம் தலை துக்கிய போது அமைதி விரும்பியான தாகூர் அரசியலை விட்டே ஒதுங்கினார். அதன் பிறகு அவருடைய கவனம் கல்விப் பணியிலும், கவிதைகள் சமைப்பதிலும் நிலைத்து நிற்பதாயிற்று.

தாகூரின் முதல் இசைக்காவியம் (Lyric) 'மாலை கீதங்கள்' ஆகும். அது வளரும் பருவத்தில் உள்ள ஒரு ஜிவன் தன்னை வெளிப்படுத்தவதற்கும் போராடுத் நிலையையும், இனம்தெரியாத சோகத்தையும் உள்ளடக்கியது ஆகும். அடுத்து அவர் எழுதியது 'காலை கீதங்கள்.'
உபநிடகங்களின் தாக்கம் சிறு வயதிலேயே அவருக்குள் ஏற்பட்டிருந்தது. தேவேந்திரர் தன் மகனுக்கு உபநிடத சுலோகங்களை சொல்லி வைத்திருந்தார். கடைசிக் காலம் வரை அவருடைய உந்துசக்தியாக உபநிடதக் கருத்துக்கள் இருந்திருக்கின்றன. அவருடைய சிந்தனைகளுக்கு உரமூட்டி இருக்கின்றன.

தாகூர் சொல்வார், 'எது கவிஞனுக்குரிய மதமோ (religion) அதுதான் என்னுடையது' என்று. 'சித்தாந்தங்கள் நிரநதத்தன்மை பெறுவது கவிதையில் மட்டுமே' என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அவர் சொன்னது யாவும் அறிவல் இருந்து வெளிப்பட்டதல்ல, அகத்தோற்றத்தில் (Inner Vision) கண்டதாகும்
ஆண்மிக ஊற்றில் வெகுவாக அனுபவித்து அருந்தியவர் தாகூர். நட்சத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட வானமும், மனித இருதயத்தின் நேயமும் அவருடைய கவிதைகளுக்கு சிறகை அளித்தன.

'கீதாஞ்சலி' (1913) நோபல் பரிசினைக் கொண்டு வந்தது. அது இருவர் பாடும் பாட்டாக(dute) அமைந்தது. கடவுளும் மனிதனின் ஆன்மாக, (நீயும் நானுமாக) இருவர்.
தாகூரின் 'சாதனா'(sadhana) வெறும் சொற்பொழிவு அல்ல, உபநிடத சாராமாகும். மண்ணிலும், சூரியனிலும், நட்சத்திரங்களிலும், நதியின் ஆழங்களிலும் ஒளிந்து கிடக்கிற அழகை வெளிக்கொணரும் போது ஒரு உயிரோட்டமான நம்பிக்கை வளரவே செய்யும். அது இயல்பு. அதைத்தான் கவிஞர் பொருமளவில் 'சாதனா'வில் விவரித்து இருக்கிறார்.

'நான் கடவுளின் பார்வையை மனிதனின் மூலமாகவும், மண்ணில் இருந்தும், மரங்கள் - பறவைகள் மூலமாகவும் பெற்றேன்' என்கிறார் தாகூர்.

அவரடைய 'ஊர்வசி' நீண்ட கவிதை. பூப்போன்ற, அதே சமயத்தில் வளமான நடையிலானது. மொழி பெயர்ப்புகளில் அதனை முழுமையாக அடக்க முடியாது.

'அவளது வலக்கரத்தில் அமிர்தமும், இடக்கரத்தில் நஞ்சும் இருந்தது. அவள் தாயுமல்லள், மகளுமல்லள்,மணமகளுமல்லள்; அவள் தூய்மையான அழகி. ஆனால், அவன் எப்போதும் எவருடைய கைக்கும் அப்பாற்பட்டவள்.' இப்படிப் போகிறது கவிதை. இது ஒரு 'சாம்பிள்.'

'ஊர்வசி' வங்க இலக்கியத்தில் மகத்தான இசைக் காவியம். அழகு பற்றிய முழுமையான ஆராதனை. மண்ணுக்கு உரிய காமத்தை பரிசுத்த அன்பாக பரிணமிக்கச் செய்வதுதான் அவருடைய 'வசந்தத்தின் தூதுவன்' (Heraid of Spring). இந்த கவிதைகளின் வழியே அவர் காதலின் இனிமையை, அதன் திகட்டலை விவரிக்கவில்லை. மாறாகக் காதலின் வலிமையைத்தான் முன்வைக்கிறார்.

பெண் என்பவள் பலவீனமான பிறவியல்லள், ஆணின் கையில் விளையாட்டுக் கருவியாவதற்கு. அவள் வலிமையும், உறுதியும் கொண்டவள்.

காதலையும், பெண்மையையும் மிக உயர்வான இடத்தில் வைத்து கவிஞர் பார்க்கிறார் என்பதற்கு மேற்கண்ட வரிகளே சான்று.

தாகூர் தனது குருகுலத்தை ஆரம்பித்த கொஞ்ச நாளில் (1902) அவரடைய மனைவி இறந்து போனார். மனைவி காலமான மறு வருடத்திலேயே கவிஞரின் இரண்டாவது மகள் இறந்து போனாள். அடுத்து அவருடைய இளைய மகன், மூத்த மகள். அவருடைய வாழ்வில் இது போல் எத்தனையோ பேரிழப்புகள். அத்தனை துயரங்களையும் அவர் சகித்தார். தன்னுடைய கவனத்தை முழுக்க முழுக்க கல்விக்கூடத்தின் பக்கம் திரப்பினார்.

'ஸ்மரண்'(In Remembrance) கவிதையில் மனைவி மீது அவர் வைத்து இருந்த அளவில்லாத அன்பும், அவளது இளப்பில் ஏற்பட்ட ஆழ்ந்த சோகமும் வெளிப்படுகிறது. இளைய மகன்பால் அவருக்கிருந்த அன்பு அவரது 'வளர்பிறை' (Crescent moon) என்கிற தொகுப்பில் வெளிப்பட்டது. உலக இலக்கியத்திலேயே ஒப்பற்ற கவிதைகள் அவை.'

'என் கண்மணீ! வண்ண வண்ண பொம்மைகளை
உனக்கு நான் கொடுக்கும் போதுதான் புரிந்தது.
மேகங்களும், நீரேடையும் ஏன் வர்ண ஜாலம்
காட்டுகிறது என்று. பூக்கள் எல்லாம் ஏன்
சாயமேற்றிக் கொண்டிருக்கின்றன என்று.'

(Crescent Moon)

கவிஞரின் இதயம் எத்தனை தூரம் இளகிப்போயிற்று என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு இந்தக்கவிதை வரிகள்.

She is - 'Like the tree that draws from the barren
rock, And pours it out in an unceasing
Stream if Service.'

[The Herald of Spring]

நோபல் பரிசைப் பெறும்போது (1913) கவிஞரின் வயது ஐம்பத்து இரண்டு. அப்போது முதல் உலகமகா யுத்தம் தொடங்கி இருந்தது. 'A Flight of swans'என்ற கவிதையை அப்போது உருவாக்கினார்.'தேங்கிக் கிடப்பது மரணம், இயக்கமே வாழ்க்கை. அது இடையறாத மாற்றங்களைக் கொண்டது'. இதுதான் அந்தத் 'தெகுப்பில் அவர் மக்களுக்குக் கொடுத்திருந்த செய்தி (Message). மனித ஆன்மா எப்படி கடவுளை சந்திக்கிறது, இடையில் எத்தனை தோல்விகளையும் துன்பங்களையும் இது ஏற்க வேண்டி இருக்கிறது என்பதை எல்லாம் அவர் அந்நூலில் விவரித்திருந்தார். 'A Flight of swans' நாற்பத்து ஐந்தே கவிதைகளைக் கொண்டது. ஆனால், வங்க இலக்கியத்தில் அது ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது.

தாகூர் கிழக்கிலும், மேற்கிலும் தன்னை ஒரே மாதிரியாகவே உணர்ந்தார். கருணை, மனிதநேயம், பகுத்தறிவின் பாற்பட்ட சிந்தனை எல்லாம் அவருடைய பேச்சில் இருக்கும் . அவரது உரையாடலில் குறும்பும், நகைச்சுவையும் கொப்பளிக்கும்.

அவருடைய பெயரில் உள்ள ரபி சூரியனைக் குறிக்கும். சூரியனைப் போலவே கிழக்கில்(கீழ்த்திசை நாடுகளில்) எழுந்தார். மேற்கில் (மேற்றிசை நாடுகளில்) பயணித்தார். கிழக்கிற்கும், மேற்கிற்கும் பொதுவானவர்.

அவர்.வாழ்க்கையைத் தவமாய்க் கொண்ட அந்த தத்துவ ஞானி வங்க இலக்கியத்தில் ஒரு புனரமைப்பு செய்தார் என்பதைவிட, இந்திய மக்களின் வாழ்வு ஈடேறுதற்காக நற்பணி புரிந்தார் என்றே செல்ல வேண்டும்.

தாகூர் மகா ஞானி. மகாகவி, மகா தேச பக்தர். அத்தனை உன்னதமான போற்றுதல்களும் அவருக்குத் தகும். காந்தி மகாத்மாவினாலேயே 'குருதேவர்' என்று போற்றப்பட்ட ஆத்ம சக்தி வாய்ந்த பெரியார் அல்லவா அவர்!

சாந்தி நிகேதன்- கவிஞர் அமைத்த கலைக்கோயில்! அது, அவருடைய திருமுகத்தில் தவழ்ந்த சாந்தத்தை சுவீகரித்துக் கொண்டிருக்கிறது. தாகூரின் கவிதை வரிகளை அங்குள்ள மரம், செடி, கொடிகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவரது ஆத்மாவின் தபோ சக்தி காற்று வெளியெல்லாம் பரவி நிற்கிறது. இந்நாட்டு இளைஞர்கள் எப்படி அதனை சுவாசிக்காமல் போக முடியும்!




□□□



# நிறை குடம்

ஊர்ந்து வருகிறது உயிர்க்கூடு-அதை
போர்த்தியிருக்கிறது வெளிறிய தோல்
உள்ளே
ஒட்டியிருக்கிறது உண்டி
கையில்
வெற்றுக் கோப்பை படபடக்கிறது.
அதுமட்டுமல்ல அவன் இதயமும் தான்
அந்தோ!
விரிகின்ற விழிக்குள் அந்த வீடு
வாசலில் ஓர் வாழையிலை
அதன் வயிற்றில்
ஒரு கிலோ அரிசி
மேலே
நீர் நிரம்பிய செப்பு
தலையிலே தேங்காய்
அருகிலே
பழம் பாக்கு வெற்றிலை
நிறை குடமாம்......?
அந்தப் பிஞ்சின் பெருமூச்சி...
மனிதா!
நிறைகுடம் வைக்க
வாழையிலை தேடாதே
ஏழையின் வயிற்றைத் தேடு!



அநாமிகன்
19-09-2002

தன் பெயர் தனக்கே
மறந்து போகுமோ
கையில் பச்சை

இரா.கமலக்கண்ணன்

## தாகூரின் தோட்டங்கள்

## - நிவேதனம் -

உன் தீயால் என்னைத்தீண்டு
தீய்த்திடு
என் வாழ்வைத் தூய்மை செய்

இந்த உடம்பை
உன் கோயிலில் எரியும் விளக்காக்கு

என் பாடல்கள்
விளக்கின் சுடருக்கு உயிரூட்டும்

இருட்டின் நடுவே
உன் தொடுதலில் நட்சத்திரங்கள் பூக்கும்

என் வேதனைத் தீ மேலெழும்பும்
அந்த விண் வரைக்கும்!

(from A Sheaf of Songs)

## உன் பாதை எது?

கடும்புயல் வீசும் நள்ளிரவில் - யாரும்
நெடும்பயணம் போவதுண்டோ

என் நண்பனே! காதல் மட்டும்ந்தான்
எப்போதும் பயணிக்கிறது

பேதையென் உணர்வுகளையே
வானம் பிரதிபலிக்கிறது

ஏனோ நான் இன்றிரவு
உறங்காமல் நலிகின்றேன்

கதவுக்கு வெளியே பாதை
கடும் இருட்டில் கிடக்கிறது
திறந்து பார்த்தவள் திகைக்கிறேன்

கருமையாய் தெரியும் ஆற்றின்
எந்தக் கரையிலோ

துயரத்தைத் தூண்டிவிடும்
தொலைதூரக் காட்டிலோ

இருளில் ஆழ்ந்து கிடக்கும்
எந்தப் பாதையின் வளைவிலோ

எனைத்தேடி
வந்துசேரும் வழிதெரியாமல்
அலைவாயெங்கோ!

(கீதாஞ்சலி)

## -பூக்கள்-

என்னிடம் ஆனபொருள் அத்தனையும்
காணிக்கையாய் உனக்களித்தேன்

ஏது நின் காலடியில் நாளை
இடுக தென்றறியாமல் திகைப்பேன்

கொத்தமலர்களில் குதுாகலித்த நாட்கள
கோடைப் பரவத்தில் முடிகிறது

வெற்றுக் கிளைகள் பூவின்றி
வெறுமை உணர்த்தி நிற்கிறது

ஒளிவிடும் ஆகாய வெளிநோக்கி
உயர்ந்து நான் நிற்பேன் எனினும்
அடடா, ஒற்றைப்பூவும் இல்லையே
எனும் ஆகாசந்தான் மனதுக்குள்

கோடையின் முடிவில் நானொரு ஏழை
கொற்றவா உனது முன்னிலையில்
பூக்கள் சொரிந்த பொழுதை நீயெண்ணி
நோக்கில் நன்றி புகழ்வதும் உண்டோ!






எம்.ஜெயராஜ்

இறந்த கலைஞர்கள் இவ்விடம் பேசுவார்.

# கவிதை ஒரு கண்கட்டி வித்தை

நான் சிறுவனாய்ப் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது'மாஜிக்' என்றால் எனக்கு ரெம்பப் பிரியம். 'சர்க்கஸ்' பார்க்கவும் போவேன். ஆனால், சர்க்கஸில் என் மனம் அதிகமாகக் கவிவதில்லை. ஏதோ அபூர்வமான சில 'பார்' விளையாட்டுக்களும், ஆணும் பெண்ணும் தனித்தனியாயோ சேர்ந்தோ 'அந்தர்' அடிப்பதுதானே அங்கே! அவையெல்லாம் பல நாள் பழகினால் தானேவந்து விடுகிறது. இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? ஆனால், 'மாஜிக்' என்றால் என்ன என்ன அற்புதமான வேலைகள். கண்மூடிக் கண் திறப்பதற்குள் எத்தனை எத்தனை மாறுதல்கள்? கண்ணைத்தான் மூடுவானேன்? விழித்தகண் விழித்தபடியே பார்த்துக் கொண்டிரக்கும் போதே நம்முன் நிகழ முடியாது என்று கருதியிருப்பதை அல்லவா நிகழ்த்திக் காட்டி விடுகிறான் இநத 'மாஜிஸியன்' என்றெல்லாம் அதிசயித்து நிற்பேன்!

கைக்குட்டையின் இரண்டு முனைகளைப் பிடித்து அவன் இழுத்தால் கைக்குட்டை அப்படியே கம்பு போல நிற்கிறது. அதனை முனையில் வைக்கிறான் ஒரு சிறு தங்க மோதிரத்தை. மந்திரச்கோலைச் சுழற்றுகிறான், கைக்குட்டையைச் சுற்றி. அவ்வளவுதான் கைக்குட்டை இருக்கிறது; மோதிரத்தைக் காணோம். கொஞ்ச நேரம் என்ன எல்லாமோ கதை பேசுகிறான். கடைசியில் கூட்டத்தின் வடகோடியில் இருப்பவர் ஒருவருடைய கோட்டுப் பையைக் துழாவிப் பார்க்கிறான்.presto Jinto Pass என்கிறான். அவருடைய பையில் இருக்கிற் மோதிரம்.''அடே ஜயா!பட்டப் பகலில இத்தனை பேர் முன்னிலையில் இப்படிப் பகற் கொள்ளை அடித்துவிட்டிரே! ஆசாமி பலே ஆசாமிதான்!" என்று அந்த அப்பாவி மனிதனை நையாண்டி வேறே பண்ணும்போது நாம் சிரிக்கின்றோம்; அதிசயிக்கின்றோம். இது நாகரிக மந்திரவாதியின் வேலை.

நமக்கேல்லாம் அந்தப் பழைய கழைக் கூத்தாடியின் வேலையும்தான் தெரியுமே! தன் கந்தல் மூட்டையிலிருந்து ஒரு சிறு மாங்கொட்டையை எடுத்து, ஒரு குழியில் இட்டு, கொஞ்சம் மண்ணைப்போட்டு மூடிக் கூடையைக் கவிழ்த்து விடுகிறான். ''ஜல் மந்திரக் காளி! சூ! மந்திரக்காளி!" என்று ஏதோ மந்திர உச்சாடனம் பண்ணுவது போலப் பண்ணுகிறான். பின்னால் கூடையைத் திறக்கிறான். அங்கே அழகிய மாஞுசெடிஉரவாகியிருக்கிறது. கூடையை மூடி மூடித் திறக்கிறான். மறுபடியும்--- மரமாகவே வளர ஆரம்பித்துவிடுகிறது. செடி பூக்கவும் காய்க்கவுமே முனைந்து விடுகிறது. எல்லாம் சில நிமிட நேரங்களில், செடியும் மரமும், காயும் பழமும், எப்படி வந்தனவோ அப்படியே மாயமாய் மறைந்தும் போய் விடுகின்றன.

கழைக் கூத்தாடியின் கடைசி வித்தை, தன் சொந்தப் பெண்ணை ஒரு பெரிய கூடையினுள் உட்கார வைத்துக் கூடைக்குள் பலதடவை நீண்ட கத்தியால் குத்துகிறான், நமக்கு உடல் பதறுகிறது. பின்னால் கூடைக்குள்ளிருந்து அவளை எப்படியோ மாயமாய் மறையும்படிச் செய்து, கடைசியில் தெருவின் மற்றொரு கொடியிலிருந்து அவளை அழைத்துக் காட்டுகிறான். இந்த அபூர்வ, அதிசயக் காட்சியைப் பார்த்தும், கூயெிஜந்தவர் அத்தனைபேரும் அவரவரிடம் இருக்கும் சில்லறைக் காசுகளையும் சேலைத் துணிகளையும் கூத்தாடிக்குப் பரிசளித்து விடுவார்கள். இப்படியெல்லாம் கண்கட்டி வித்தைகள் நம் நாட்டில் நடப்பது சர்வசாதாரணம். இந்தக் காலத்திலும்கூட.

கண்கட்டி விந்தை என்றால் நாம் திறந்த கண் திறந்தபடியேபார்த்துக் கொண்டிருக்க, நாம் செய்ய முடியாக ஒன்றை - நாம் சாதாரணமாகச் செய்ய முடியாது என்று நினைக்கிற ஒன்றை- அதி அற்புதமாகத் தன்னுடைய வேலைத் திறத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் செய்து முடித்துக் காட்டுவதுதான்.

இப்படிப்பட்ட கண்கட்டி வித்தை செய்கிறவர்கள் நம்நாட்டில் இந்தக் கழைக் கூத்தாடிகளும் 'மாஜிக் புரொபசர்' களும்தான் என்று எண்ணி விட வேண்டாம். இவர்களையெல்லாம்விடச் சிறந்த கண்கட்டிவித்தைக்காரர்கள்தான் நமது தமிழ்க்கவிஞர்கள். ஏதோ சில வார்த்தைகள் - ஏதோ சில கருத்துக்கள்-நமக்கெல்லாம் தெரிந்தவைதாம்; அவற்றை3 வைத்துக் கொண்டு அற்புதம் அற்புதமான படைப்புகளைப் படைத்து விடுவார்கள். அவர்களுடைய படைப்புக்களை நாம் பார்த்தால் ''என்னடா ஆச்சரியம்? எப்படியடா செய்ய முடிந்தது? இது என்ன கண்கட்டி வித்தையா'' என்றுதான் மலைக்கவேண்டியிருக்கும். அப்படி நமது கவிஞன் ஒருவன் செய்யும் ஒரு அற்புதமான கண்கட்டிவித்தையையே பார்ப்போமே!

''வாழை மரத்தின் உபயோகங்கள் என்ன?" இது இரண்டாம் வகுப்பு மாணவனுக்குத் தேர்வில் வரும் வினா. ''வாழைக்காய் கறிக்கு உதவும்; வாழைப்பழம் தின்ன நல்ல சுவையாயிருக்கும்; வாழைப் பூவையும் தண்டையும்கூடக் கறி சமைக்கலாம்; வாழை மட்டையை நாம் மடிக்கலாம்; அந்த நாரின் பூத்தொடுக்கலாம்; வாழைத்தடை பொடிப்பட்டை செய்ய உதவும்; வாழை இலையில் உணவு பரிமாறலாம்; சாப்பிடலாம்" என்ற பதிலையும் எழுதிவிடுவான் பையன். கொஞ்சம்

கெட்டிக்காரப்பையனாயிருந்தால் ''வாழையில் பலாகம் உண்டு; பூவன், காதலி, செவ்வாழை, ரஸ்தாளி என்றெல்லாம் அவற்றுக்குப் பெயருண்டு. ஒவ்வென்றின் ருசியுமே தனியாக இருக்கும்'' என்றும்கூட எழுதிக்காட்டுவான் விடைத்தாளில். ஆனால் வாழையும், வாழை இலையும் கவிதைக்கே உபயோகப்படும். அதிலும்ஒரு அரசனது கொடையையும் அழகையும் பாராட்டுவதற்கு
எழுந்த நயமுள்ள பாட்டிலே நல்லதொரு இடம் பெறும்என்று யாரேனும் நினைக்க முடியுமா? நாம் எதிர் பார்க்க முடியாத ஒன்றைச் செய்து காட்டுவதுதானே கண்காட்டி வித்தை செய்பவன் செய்யும் அற்புதம்!

ஒரு கவிஞன் ஒரு ஊருக்குப் போகிறான். ஊரின் பெயர் ஓரங்க நாடு. (நாம் இன்று Warrangal என்று சொல்லுகிறோமே அந்த நாடுதான் போலும்!) அதைஆளும் அரசன் பெயர் புவனி உருத்திினை. நீர்வளம் நிளவனம் மிகுந்த நாடு, அவனுடைய நாடு. போகிற வழியெல்லாம் நல்ல வயல்கள், நல்ல தென்னந் தோப்புக்கள், வாழைத் தோட்டங்கள்தாம். எங்கு பார்த்தாலும் செழிப்ப. 'வாழைவடக்கீனும்; வான் கமுகு தெற்கீனும்; கரும்பும் அளநீரும்கண்திறந்துமடைபாயும்' எங்கே. அந்நாட்டிலே ஒரு அதிசயம். ஆம், ஒரு நல்ல அதிசயம்தான்! வாழைகள் எவ்வளவுதான் செழித்து அடர்ந்து இருந்தாலும் ஒரு வாழை மரத்திலாவது குருத்து என்பதையே காணோம். 'இ:.து என்ன! குருத்து விடாமலே துளிர்க்கும் வாழைகளும்எண்டா? என்று ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், வாழை மரங்கள் எல்லாம குருத்து விட்டதென்னவோ உண்மைதான். ஆனால், அந்தக் குருத்து நல்ல இலையாக மாறுவதற்குமுன்பே அறுபட்டிருக்கவேண்டும் என்றும் தெரிந்தது. அறுபட்ட குருத்துக்களின் அடிப்பாகம் இருந்த காரணத்தால்.

'ஆம்! வாழைக் குருத்துக்கள் ஏன் இப்படி இந்த நாட்டில் அறுபடவேண்டும். எண்ணிறந்த வாழைகள் எங்கும் நிறைந்திருந்தும் எல்லாம் குருத்திழந்து நிற்பதின் காரணம் என்ன?' என்று கொஞ்சம் எட்டி ஆலோசித்தான் கவிஞன். அப்படி யோசனை செய்து கொண்டே அரண்மனைக்குள் வந்துவிட்டான் அவன். அரண்மனையில் எங்குப் பார்த்தாலும் சாப்பாடு அமர்க்களம்தான். எண்ணிறந்த அதிதிகளுக்குப் பரிமாறிக்கொண்டே இருக்கிறார், அழையாதவர்கள், இன்று வந்தவர்கள்,நேற்று வந்தவர்கள்- என்ற கணக்கையே காணோம். போனவர் வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு. முதற்பந்தி, இரண்டாம் பந்தி என்று பந்திகள் எத்தனை எத்தனையோ! சாப்பிட்டவர்களின்எச்சில் இலைகள் வெளியே எறியப்பட்டு மலை போலவே குவிகின்றன. அவற்றைஅப்புறப்படுத்துவதற்கே ஒர தனி 'டிபார்ட்மென்டு' வேண்டியிருந்தது அந்த அரசாங்கத்திலே. உள்ளே நுழைந்த கவிஞனையும் பிடித்து இழுத்து உடகாரவைத்து அறுசுவைஉணவைப் பரிமாறி சம்பிரமமாக ஊட்டியே அனுப்பி விட்டார்கள் அங்குள்ள மேற்பார்வையாளர்கள்.'என்னடா! இப்படியும்ஒரு சாப்பாடா? என்ன உலகமே திரண்டு வந்து இங்கு உண்டு போகிறது போலும்!' என்றெல்லாம் அதிசயித்தான் கவிஞன்; உண்ட மயக்கத்தோடேயெ வெளியில் வந்தான். நகரின் அரச வீதியில் ஒர வீட்டின் திண்ணையில் குந்தியிருந்தான் சிலமணிநேரம்.

மாலை ஆறுமணி, மன்னன் பவனி புறப்பட்டு விட்டான். **ஆம்; புவனி உருத்திதரன்தான்,** நல்ல யானையின்மீது ஆரோகணித்து வருகிறான். அரச பவனியைக் காண நகர மக்கள் அனைவருமே திரண்டு வருகிறார்கள்; ஆடவரும் பெண்டிரும், இளஞ்சிறுவரும் கன்னிப் பெண்களும், எல்லோருமே போட்டி போட்டுக் கொண்டு வீட்டை விட்டுவெளியே ஓடி வருகிறார்கள்; வணங்குகிறார்கள். அரசனும் அவர்களுடைய வணக்கத்தை எல்லாம் புன்னகையோடேஏற்று, மறுவணக்கம் வேறே செய்து அவர்களை ஆசீர்வதிக்கிறான். அரசனின் அன்பிலே ஈடுபட்டவர் பலர். ஆனால், அவன் அழகிலே மயங்கிவரும் பலா. அதிலும் கன்னிப் பெண்களின் உள்ளத்தையெல்லாம் கொள்ளையே கொண்டுவிடுகிறான் அவன். பவனிவந்த அரசனின் உருவம் மறைய மறைய இந்தப் பெண்கள் நிலைகொள்ளாது துடிக்கிறார்கள். காதல் வெப்பமோ இவர்களைத் தகிக்கிறது. கொஞ்சம் சமாளித்துக் கொண்டு வீட்டிற்குள்ளே சென்றால் இந்த வெப்பம் காரணமாகவே இப்பெண்களின் உடம்புகளில் கொப்புளங்கள் உண்டாகின்றன. கொப்புளங்களை ஆற்ற விரைகின்றனர் உற்றார் உறவினர். வருகிறார் ஒரு நாட்டு வைத்தியர். ''ஓ! இதற்கு விசேஷமான வைத்தியம் ஒன்றுமே தேவையில்லை. இளங்குருத்து இலையாக ஒன்றிணைடு வாழை இலையைக் கொண்டு வந்து, அதில் நல்ல ஆமணக்கு எண்ணெயைத் தடவி அதில் இவர்களைப் படுக்கவைக்க வேண்டியதே. வேறு வைத்தியம் ஒன்றும் என்னால் செய்யமுடியாது'' என்று செல்லிப் போய்விடுகிறார். பவனிகண்ட பெண்கள் வீடுகளில் எல்லாம் இதுவேதான் வைத்தியம். அவ்வளவுதான். ஊவில் உள்ள வாழைக் குருத்திலைகளுக்குப் பிடித்தது சனி மறுபடியும். அரண்மனையில் சாப்பாடு போடுவதற்கே ஊரில் உள்ள வாழைக் குருத்துக்கள் காணவில்லை மிஞ்சியிருக்கும் வாழைக் குருத்துக்களுக்கும் இப்போது கிராக்கி ஏற்பட்டுவிட்டது என்று காண்கிறான் கவிஞன். இப்போது தெரிந்தது அவனுக்கு ஏன், தான் பார்த்த வாழைகளில் எல்லாம் குருத்தில்லை என்று. மறுநாட் காலை அரச சபைக்கே செல்கிறான் கவிஞன். மன்னனையே நேரில் பார்க்கிறான்; தன் முந்திய நாள் அனுபவத்தை வைத்துக்கொண்டு பாடுகிறான் ஒரு பாட்டு

**''அவனி முழுதுண்டும்; அயிரா வதத்து உன்**
**பவனி தொழுவார் படுத்தும்,''**

இவர்கள் எணணங்கள் எல்லாம் அவர்கள் முகத்திலே பிரதிபலிக்க ஆரம்பித்தன. அந்த நிலையிலே அவர்கள் இருக்கும்போதே கவிஞன் மேலும் பாட ஆரம்பித்து விடுகிறான்.

-புவனி!

**உருத்திரா! உன்னுடைய ஓரங்க நாட்டில்**
**குருததிரா வாழைக் குழாம்**

என்று பாடடை முடிக்கிறான். பாடடை முடிக்கானோ இல்லையோ, சபையோர் அத்தனை பேரும் - அரசன் உள்பட விழுநது விழுந்து சிரிக்க ஆரம்பித்துவிட்டாாகள். சிரிப்பைவிட அவர்கள் ஆனுபவித்தது கவிஞன் செய்த அற்புதத்தைத்தான். ''அடடா! சாதாரண விஷயம் தானே நம் நாட்டில் வாழைகளுக்குக் குருத்தில்லை என்பது? அதுகூட முற்றும் உண்மையாயிராதே - கவிஞனுடைய கற்பனையாக இருக்கலாமே? இதை வைத்துக்கொண்டு, அரசனது கொடை, வள்ளன்மை, அழகு எல்லாவற்றையும் எவ்வளவு அழகாக அற்புதமாகப் பாராட்டிவிட்டான் . ஆம், ஒரு அற்புதத்தையே தான் படைத்து விட்டான் இவன்!" என்றெல்லாம் பேசத் தொடங்கிவிட்டார்கள் (ஆம், மாங்கொட்டையிலிருந்து மரம் வரவழைக்கின்ற காரியம் இதைவிடச் சிறந்த வேலையா என்ன!)

என்ன கவிஞன் செய்த வேலை கண்கட்டி வித்தை தானா? அல்லது வேறு வேலையா? இப்படிப்பட்ட அற்புதமான அதிசயமான கண்கட்டி வேலை செய்த கவிஞன் யார்? வேறு யாராயிருக்க முடியும்? எல்லாம் நம்முடைய கவிச் சக்கரவர்த்தி கம்பன்தான். அவன் காட்டும் கண்கட்டி வித்தையின் பூரணப் பொலிவையும் மறுபடியும் பார்க்கலாம். கண்ணை நன்றாய்த் திறந்து கொண்டு காதையும் நன்றாய் அகல விரித்துக் கொண்டே அனுபவிக்கலாம். ஏன் நம்முடைய நாவாலும் அந்த அற்புதப் படைப்பை ஒரு முறையன்று முறை பாடிப்பாடி அனுபவிக்கலாம். அப்போதுதான் கவிஞன் செய்கின்றவேலை, அவன் செய்கின்ற அற்புதம் அவனுடைய இசைஞானம், எல்லாம் நன்றாயாத் தெரியும்.

**''அவனி முழுதுண்டும், அயிரா வதத்து உன்**
**பவனி தொழுவார் படுத்தும்,-புவனி**
**உருத்திரா! உன்னுடைய ஓரங்க நாட்டில்**
**குருத்திரா வாழைக் குழாம்''**

#### #### ####

இப்படிக் கவிஞன் செய்யும் அற்புத வேலைகளையெல்லாம் நம்மைவிட நன்கு தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவர் யாரென்று சொன்னால், அஃதே ஓர் அதிசயம் - கண்கட்டி வித்தையாகத் தானிருக்கும். அவர் லார்ட் வேவல் தாம். நல்ல கவிதா உணர்ச்சியோடு, நல்ல கவிதா அனுபவத்தோடு, ஏன்? வெறியோடு தான் சொல்கிறார் அவர்.

உயர்ந்த கவிதையென்றால், அதில் ஓர் இசை, ஓர் அற்புதம், ஒரு கண்கட்டி வித்தையெல்லாம் இருக்கும்; நல்ல அர்த்தபுஷ்டி உடையதாகவும் இருக்கும். மற்ற மக்களுக்கெல்லாம் கிடைக்காத ஓர் அரிய காட்சியே கவிஞனுக்குக் கிடைக்கிறது. ஆனால், அந்தக் காட்சி அனுபவத்தை எல்லாரும் தெரிந்து கொள்ளக்கூடிய சாதாரண மொழியில் வெளியிட்டால்தான் பயனுண்டு. ஏதோ சிலருக்கு மட்டும் தெரியக்கூடிய ஒரு மொழியில்
(தமிழ்ப் புலவர்கள் சொல்கிறபடி செய்யுட்தமிழில்) வெளியிடுவது என்று ஏற்பட்டுவிட்டால் அதனால் என்ன பிரயோஜனம்?

"Music, Mystery and Magic are the essence
of high poety and surely it should have meaning.
A poet is a man to whom vision is given beyond his
fellows. Of what use is that vision if he exspresses
it in words unintelligible to all except a small circle"

என்று மிக மிக அருமையாகச் சொல்லியிருக்கிறார்.

அரசியலிலே கண்கட்டிவித்தை செய்வதில் பலே கெட்டிக்காரர் என்று பெயர் வங்கியவர் லார்ட்வேவல். அவர் கவிஞன் செய்யும் கண்ணட்டி வித்தையையுமே நன்றாக அறிந்திருக்கிறார்; அதை நமக்கு எடுத்துச் சொல்லவும் செய்கிறார்.

நன்றி . அமரர் பாஸ்கரத் தொண்டமான்.

**********

## கொப்பி அடித்த கவிதைகள்

## ஈழத்துப் புத்தர்கள்

நீ மேகம்தான்
அதனால்தான்-உன்
பார்வையின்றி
வரண்டு போகிறேன்.
வட-கிழக்கு இதயங்கள் போல


நீ இருள்தான்
அதனால்தான்
ஒளிக்கீற்றின்றி
ரணப்பட்டுப் போகிறேன்
என் இளமை
போராட்ட மண்ணில்
புதைந்த ஆத்மாக்களின்
முகாரி போல

நீ நதிதான்
அதனால்தான்
உன் வளைவெங்கும்
அலைந்து திரினின்றேன்
வட புலத்து வாழ்கை போல

நீ நெருப்புதான்
அதனால்தான்
கருகிப் போகிறேன்
ஈழத்துப் புத்தர்களின்
எதிர்காலம் போல

என் இடிந்தொடிந்து
எழுந்த இதயம் போல
மீண்டும் விழிக்கிறது
என் மண்!

ஓட்டமவடி எம்.பீ. நளீம்



## அன்புள்ள யாழ்ப்பாணத்து ஐயாவுக்கு

வணக்கம் ஐயா
வந்தேன் உமது வாசலுக்கு
இருபது வருஷமாச்சு உமது
இன்முகம் கண்டு. நலமா ஐயா........

காண வந்த வழியெல்லாம்
கானக் குயில்கள் 'கானா'ப் பாடின.
பருந்தொனறு கோழிக்குஞ்சை
படம் பார்க்க கூட்டிச் சென்றது
எலிகடகுஞ்சுகள் பூனையிடம்
பொங்கு தமிழ்ப் பால் அருந்தின.
பாம்பும் கீரியும்
பகிடிவிட்டுச் சிரித்தன.
புலியும் சிங்கமும்
புரிந்துணர்வொன்றாய்ப்
புணர்ந்து கிடந்தன.



யாழ். கண்டிப் பாதையெங்கும்
வெண்ணிலாத் துளிகள்
வன்னிக் காடெல்லாம்
வசந்தப் பூக்கள் வாசனை.
காவலரண்களில்
'கார்ட்டுன்' சிப்பாய்கள்
கைகளில் ஐஸ்குச்சிகள்
கண்களில் தீக்குச்சிகள்.



சோனகர்கள் தெருவில் சோனகர்
தெருவில் நின்று
சோபனம் கூறினார்
'முறிந்த பனை'கள் எல்லாம்
முளைத்து எழுந்து
முகம் பார்த்தன.



எல்லாம் நன்று எல்லாம் நன்று.
ஆயினும் ஏதோ ஒன்று
மனதில் நின்று உறுத்துகின்றதே
என்ன ஐயா அது.......
என்ன ஐயா அது.......?

நன்றி.கவிஞர்
என்.ஏ. தீரன்
(இரண்டாம் பக்கம்)

# இனங்களின் ஒற்றுமைக்கு மனங்களில் மாற்றம் வேண்டும்

இனங்களின் ஒற்றுமையின் எழுச்சிதன்னை
மனங்களிலே பதிய வைத்து: மலரும்வாழ்வில
மனிதயினம் மகிழ்ச்சியுடன் மறந்த போரை
புனிதமுள்ள நெஞ்சினாராய் புவியில்வாழ
அறிவுரைகள் அளித்துவரும் அறிஞர்முன்னால்
சிறியவனென் செப்புமொழி செல்லாக் காசு!

மிருகவெறி கொண்டவரை மனிதராக்கி
பிறந்தபயன் அடைவதற்கு மதங்கள் கூறும்
கருத்துரையைக் கேட்காத மனிதர்முன்னால்
உரைக்குமெந்தன் உபதேசம் உமியாய்ப்போகும்!

மதகுருமார், போதகர், மறைநூலெல்லாம்
இதுவரையில் சொல்லாத ஏற்றம்மிக்க
புதுக்கருத்தை நான் சொல்லப் போவதில்லை
பொதுக் கருத்தைத் தான்சொல்வேன்
பொறுத்துக்கேட்பீர்

(வேறு)

மனங்களினால் ஒன்றுபட்டு இந்த மண்ணில்
மனிதகுலம் தெளிவடைந்து வாழாவிட்டால்
இனஉறவு, நீதிநேர்மை, பாசம்அன்பு
இந்நாளில் நிலைக்கவழி இல்லை காணீர்!
பிணக்காடாய் இந்நாடு மாறியெங்கும்
பேய்களது ஆட்சிதான் வேண்டுமென்றால்
உனதெனது என்றுசமர் புரிந்து வாழ்வில்
உத்தரிக்க வேண்டிவரும் உயிர்களெல்லாம்!

வெண்புறாவைப் பறக்க விட்டால் கறுப்பு
வெள்ளையாக முடியாது : சமாதானத்தை
கண்முன்னால் நாம்பார்த்துக் களிக்கவேண்டில்
கடவுளது பிள்ளைகள் நாம் எனுமுணர்வில்
வன்முறையைக் கைவிட்டு: இந்தநாடு
வாழ்கின்ற யாவருக்கும் சொந்தமென்று
உண்மையாக நேசித்து வாழ்ந்து: எங்கள்
உறவுகளை அரவணைத்து உயரவேண்டும்!

பலயினங்கள் ஒன்றாக வாழம் நாட்டில்
பலயினங்கள்:பலமொழியும் இருந்தே தீரும்!
பிளவுபட்டால் போர் வெடிக்கும் : பிறகுநாடு
பசி தீர்க்க உணவுமின்றிச் செத்தேபோகும்
குழந்தைமனம் கொண்டவராய் மனிதர்
வாழ்ந்தால்
கொடிய வன விலங்குகளாய் அலையமாட்டோம்
இழவு, மூப்பு, நோய்கண்டு புத்தர்ஞானம்
ஏன்பெற்றார்? அதைநாமும் உணர்ந்து பார்ப்போம்

பிள்ளைநான்கைப் பெற்றுவிட்ட அன்னை மூத்த
பிள்ளையின்மேல் அதிகபாசம் வைத்து: மற்றப்
பிள்ளைகள்மேல் குறைந்தபாசம்
வைப்பதில்லை!
பெற்றவளின் மனஉணர்வு எல்லோருக்கும்
உள்ளமதில் ஊற்றெடுத்தால் உறவுவாழும்!
உயர்வு தாழ்வுப்பேதங்கள் ஒழிந்தே போகும்!
எல்லேரும் இந்நாட்டு மன்னராவோம்!
எழில் கொஞ்சும் இலங்கைநாடு ஏற்றம்காணும்!

உலகமென்றைப் படைத்ததேவன் மனிதரையும்
ஓரேசாயல் கொண்டவராய்ப் படைத்துவிட்டான்!
உளம் மூன்று கால்கைகள் ஏழெட்டென்று
ஒருவரையும் தனியாகப் படைத்ததில்லை!
நிலவென்று ஆதவனும் ஒன்றேயொன்று!
நிலத்தில் நமக்குஅவை குறைத்துக்கூட்டி
ஒளி வழங்கிப் போனதாகக் கதையேயில்லை!
உள்ளத்தில் இதைநாமும் உணர்ந்து
பார்ப்போம்!

ஒருமொழியும்,ஒருஇனமும் உலகமெல்லாம்
உறவாடச் செய்திருந்தால் கலகமில்லை!
இறைவனவன் எதையெண்ணிப்
பிழைவிட்டானோ?
எளியசாதி, உயர்சாதி, வெள்ளைகாரன்
கறுப்பனென்று நமைநாமே பிரித்துக் கொண்டு
காலமெல்லாம் அமைதியின்றி வாழ்கின்றோம்!
உருப்படியாய் நாடுயுர வழிபண்ணமால்
உருவரோ டொருவர்மோதி மாழுகின்றோம்!

சிங்களத்தாய் பெற்றெடுத்த மழலை யொன்றை
செந்தமிழ்த்தாய் தத்தெடுத்து வளர்த்தால்அந்த
சிங்களத்தாய் பெற்றமகன் தமிழனாவான்!
செந்தமிழன் பெற்றெடுத்த சிசுவைவாங்கி
சிங்களத்தாய் வளர்த்தெடுத்தால் அவன்
புவியில்
சிங்களவன் எனவாழ்வான்: இதனையெண்ணி
எங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்துநாடு
ஏற்றமுறத் தொழில்புரிந்து இனிமை
காண்போம்!

தொடக்கூடா தென்று சொன்ன கனியை
ஏவாள்
தொட்டநாள் தொடங்கியிந்தப் புவியோர்
நெஞ்சில்
கடவுளது ஆணைக்குக் கட்டுப்பட்டு
கீழ்ப்படியும் உணர்வுதனை இழந்து போனார்!
அட மனிதன் விலங்குகளாய்ப் போனான்:
இந்த
அழிமதியை நிறுத்தாது போனால் நாளை
கெடுமதியே மிஞ்சுமென்று மதத்தின்பேரால்
கோடுபோட்டு மனிதர்களைச் சேர்த்தார்
முன்னோர்!

புத்தர்வந்தார், இயேசு நபி காந்தி வந்தார்!
புனிதமுடன் வாழவழி காட்டிச்சென்றார்
இத்தரையில் வாழ்கின்ற மனிதரெல்லாம்

ஏன்தானே மதம்பிடித்து வாழ்ந்து மோதி
செத்தொழிந்து போகின்றார்? விதியா? இல்லை!
சிறுபான்மை, பெரும்பான்மை என்று வீணாய்
சொத்து சுகம் உரிமையென்று குறைத்துக்கூட்டி
சுயநலத்தால் பிரிவினையை வளர்த்துக் கொண்டார்!

விஞ்ஞான வளர்ச்சிகண்டு மனிதசாதி
விண்சென்று நிலவில்போய்க் காலைவைத்தும்
மெய்ஞ்ஞானம் பூமியில்கால் ஊன்றவில்லை!
மதமென்றும்,இனமென்றும்,மொழிகளென்றும்
அஞ்ஞானக் கண்கொண்டு பார்த்து வாழ்வை
அநியாயம் செய்கின்றார் மனிதர்: காலம்
எஞ்ஞான்றும் இதுபோல் இருந்தால் மக்கள்
இனச்சண்டை மொழிச்சண்டை என்றே மாய்வார்!

எனதுனது எனும்கொள்கை எவர்க்கும் வேண்டாம் !
எல்லோரும் சமமென்று எண்ணல் வேண்டும்!
மனதுஅழ வேற்றுமையைக் காட்ட வேண்டாம்!
மாற்றான்தாய்ப் பிள்ளையென்ற உணர்வை நெஞ்சில்
இனங்களுக்குள் விதைக்காமல் வாழவேண்டும்!
எல்லாளன்,கைமுனுவின் படையில் எல்லா
இனத்தவரும் இருந்தகதை நமக்கோர் பாடம்!
ஏனெமக்குள் வீண்யுத்தம்? வேண்டாம்!வேண்டாம்!

ஆட்சிதனைப் பிடிப்பதற்கு அரைத்தமாவை
அரைப்பதுபோல் இனம்மொழியைப் பிரித்து
வைத்தால்
மீட்சி வரப் போவதில்லை: மேடையேறி
முழக்கமிட்டும் பயனொன்றும் ஆவதில்லை!
ஆட்சியிலே உள்ளவர்கள் சட்டம் போட்டு
அனைவரையும் ஒருகுடையின் கீழ் அர்த்தி
ஆட்சி செய்தால் துவேஷத்தின் வாய்யடைக்கும்!
ஆம் இதுவே ஒற்றுமைக்கு உகந்த மார்க்கம்!

சுயநலத்தை தூக்கிவீசிப், பொதுநலத்தின்
சுகம்காண யாவரையும் ஒன்று சேர்த்து
பயம்நீங்கி நிம்மதியாய் வாழச்செய்தால்
படைவீரர் கூட மக்கள் நண்பராவார்!
கயமையுள்ளம் கனியாமல் பலன் தராது!
கங்கைகளைத் திருப்பாமல் ஊர்வராது!
நயம்நட்டம் பார்க்கின்ற வியாபாரம் போல
நாம் நடந்தால் பாசவெள்ளம் நமைச்சேராது!

எழிலான இலங்கைமணித் திருநாட்டிற்கேன
இந்நிலை வந்ததென்று எண்ணிப்பார்த்தால்
விழியிறைக்கும் நீரெல்லாம் வெள்ளமாகும்!
வேண்டாமே நமக்கிந்த வேற்றுமைகள்!
அழிமதியை உடன்நிறுத்தி இனங்களெல்லாம்
இன்னையெங்கள் இலங்கைநாட்டை வளப்படுத்த
அணிதிரள்வோம்! கூற்றுவனும் அகன்று ஓட
அனைவருமே சமத்துவமாய் அன்பாய் வாழ்வோம்!

கவிஞர் செ.குணரத்தினம்.
நன்றி -இன ஐக்கியம்

# இனஐக்கியம்

நாம் சுகங்களைப் பறிகொடுத்து
சோகங்களைச் சொந்தமாக்கிய
யோகமில்லாத ஜீவன்கள்
இனங்களுக்கிடையில் இனிதான ஐக்கியம்
இனியாவது வளருமாமென
ஏக்கங்களைச் சுமக்கின்ற
தூக்கமில்லாப் பிறவிகள்

ஒற்றுமைகள் குறைந்து போய்
வேற்றுமைகள் நிறைந்து போன
பிரதேசங்களில் ஜீவிக்கும்
பரதேசிகளான ஜீவன்கள்
அடிக்கடியனுபவிக்கும்
நெருக்கடி நிலமைகளில்
எத்தனையை விவரிப்பது
எப்படித்தான் விமர்சிப்பது

பாலாறு தேனாறும்
பரவிப் பாய்ந்து வரும்
இலங்கைத் தாய் மடியினிலே
கண்ணிர் அருவிகளும்
செந்நீக் குருதிகளும்
ஊற்றெடுத்துப் பாய்கின்ற
குயிலினத்தின் கானத்திலே
சொக்கித்துப் போன நாம்
துப்பாக்கிச் சன்னத்திலே
விக்கித்தப் போகிறோம்

அன்று சின்னஞ்சிறு வண்டுகளின்
ரீங்கார இசை கேட்டுப்
பூரித்துப் போன நாம்
இன்று பீறிட்டுப் பாய்கினிற
பீரங்கி வெடி கேட்டுத்
தூரத்திலோடுகிறோம்.

கைக் குழந்தை கதறியழ
கைப் பையும் தவறிவிழ
தாண்டிக்குளத்து சனம்
தாண்டிக் வருகையிலேயே
கண்கள் உடைப்பெடுக்கும்
கண்ணிர் பெருக்கெடுக்கும்
பால் மறவாக் குழந்தை கூட
பாசுக்காய்க் காத்திருக்கும்
பல் விழுந்த பழசுகளோ
கால் கடுக்க நின்றிருக்கும்
கொழுத்தும் வெயில்களிலே
களைத்துப் போன ஜீவன்களோ
சோதனை முகாம்களிலே
வேதனையையனுபவிக்கும்
பொறிகளுக்குள் அகப்பட்ட
பொதுமக்களை அறிவதற்காய்
பத்திரிகையைத் திறந்து ஒரு
பார்வையை ஓடவிட்டால்

உதயத்துச் செய்திகளாய்
இதயத்தைப் பிளிவதுவோ
கிளாலிப் பயணங்களும்
அகால மரணங்களுமே
உப்புக் கடல்களில்
உருக்குலைந்து ஒதுங்குவதோ
உறுப்பறுந்த தமிழர்களுமே.

அரிசிமா சீனியோடு
எரிபொருள் மருந்துகளின்
விலைவாசி நிலைகளெல்லாம்
மலை போலேறியதால்
வெறுமை யுருவங்களாய்
வறுமையோடு போராடுகின்ற
வட பகுதி மக்களின்று
எத்தனையெத்தனையோ.

பன்னெடுங் காலாயப்
பகைமைகளே தெரியாமல்
ஒருதாயின் மக்களைப் போல்
ஒற்றுமையாய்ப் பழகிவந்த
இலங்கை வாழ் மக்களினது
இனிதான உறவுகளோ
சிதைந்து விரிந்து
சின்னாபின்னமாகியதால்
இணைந்திருந்த உருவங்களின்று
பல்வேறு துருவங்களாயுள்ளன.

ஒற்றுமைத் தென்றல்கள்
ஊடறுத்த பிரதேசங்களில்
வேரேடுத்து நிற்கின்றன.
ரோஜாக்களின் இதழ்களாய்
இணைந்திருந்த இனங்கள்
காக்கைகளின் எச்சங்களாய்
சிதறிப் போய்க் கிடக்கின்றன.

பத்திரிகை முகப்புகளில்
முத்திரைகள் பதிப்பதெல்லாம்
அநியாயமாய்ச் செத்தவர்களும்
அழிவாகிப் போன சொத்துக்களுமே
சோலைவனப் பூமிகளின்று
பாலைவனமாய்க் கிடக்கிறன.

அகதி முகாம்களிலல்லலுறுகின்ற
அனைத்தின மக்களும்
ஆண்டவனிடம் வேண்டுவதோ
இரக்கமுள்ள உறவுகளையும்
உறக்கமுள்ள இரவுகளையுமே

அழிஞ்சிப்பொத்தானையில்
அழிந்து போன உயிர்களையும்
கொக்கட்டிச் சோலை அரந்தலாவயில்
கதறியழுத மக்களையும்
வெலிஓயாவில் வீழ்ந்துகிடந்த
சிறுவர் சிறுமியரையும்
இரை மீட்டிப் பார்க்கையிலே

திரை போட்டு எழுவதெல்லாம்
இனங்களுக்கிடையிலான ஐக்கியமொன்று
இனிமேலும் வாராதோ வென்கின்ற
பகற்காலக் கனாக்களும்
பதிற் காணா வினாக்களுமே.

அழகிய நம் தீவினிலே
ஐக்கியங்கள் செத்ததனால்
அப்பாவி மக்களின்று
அனுதினமுமனுபவிக்கும்
அல்லலகளவலங்கள்
துன்பங்கள் துயரங்கள்
எத்தனையெத்தனை

துப்பாக்கி வேட்டுக்கள்
எப்பக்கமுங் கேட்பதனால்
பூவிழந்து பொட்டிழந்து
மூத்தவனையிளையவனை
பறி கொடுத்த பாவிகளாய்
அகதியாயநாதையாய்
முடங்கிக் கிடப்பவரின்று
எத்தனையெத்தனையோ

ஐக்கியங்கள் தொலைந்ததனால்
அனுதினமும் நடப்பதென்ன
வீணான சாவுகளும்
வெறுப்பான் வாழ்வுகளுமே
ஆலயங்கள் பாழடைகின்றன
புத்தி ஜிவிகளோ செத்துப் போகின்றனர்
பள்ளி மாணவர்களோ பயிற்சி பெறுகின்றனர்
அளவ்வை ஆறுகளும்
பொல்கொடவாவிகளும்
மனிதப் பிரேதங்களை மனமின்றிச்
சுமக்கின்றன.

தலை நகரில் குண்டு வெடித்தால்
தமிழர்களே சுற்றிவளைப்பு
சோதனைகளும் வேதனைகளும்
சொந்தம் கொண்டாடி வரும்

கண்டு பிடிப்புக்கள் மாறியின்று
குண்டு வெடிப்புக்களே மீறியுள்ளன
அநீதிக் கதிர்கள் களியாட்டம் போட
மனிதப் பயிர்கள் பலியாட்டமடைகின்றன.

உபசரிப்புக்களும் அனுசரிப்புக்களும்
நிறைந்து போன நாட்டிலே
புனித யுத்தங்களும் மனித ரத்தங்களும்
மலிந்து போய்க் கிடக்கின்றன.

நேயங்களும் ஐக்கியங்களும்

விடை பெற்றுப் போனதனால்
விரோதங்களும் குரோதங்களும்
குடை பிடித்து நிற்கின்றன.
றஹும் ராமு காமினியின் முகங்களிலே
கோபத்தீக்கள் கொளுந்து விடடெரிகின்றன
சமாதானப்புறா சிறகடிக்க முடிவதில்லை.

ஆயிரம் திட்டங்கள்
அனைவரும் தீட்டினாலும்
அனைத்துமே வெற்றிபெற
ஐக்கியங்களே முக்கியங்களாகும்.

எனவே
இன ஐக்கியம்
இனிதாக வளரட்டும்
இன்ப வாழ்க்கை
எங்குமே பரவட்டும்
வல்லவன் உதவட்டும்
வாழ்த்துக்கள் பெருகட்டும்.

□□□

நன்றி
---எஸ்.அப்துல் சமத்---

## வேண்டுவது ஒற்றுமை விலக்குவது வேற்றுமை

வேற்றுமையால் வரும் தீமைகளே
வெட்கித் தலைகுனிந்தோடு தினம்
கூடி மகிழ்வோடு சோதரராய் - நாம்
கூட்டுறவில் நாட்டம் கொள்வோம்

ஓர் குலம் என்றே வாழ்ந்திடுவோம்
ஓர் உலகை இங்கு கண்டிடுவோம்
ஊருடன் கூடி வாழ்ந்திடுவோம்
வேருடன் பகையை ஒழித்திடுவோம்

சிங்களவர் செந்தமிழர் இஸ்லாமியர் பேகர்
சிறந்து வாழ்கின்ற எம் திரு நாட்டில்
பொங்கு புயல் வீசி எம தொற்றுமை குலைந்து
புன்செயல் பெருகி மிக இம்சையுறலாமோ

மனமே வாழ்வின் உயர்நிலையாம் - அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்
ஈனசாதியெனும் பேச்சினைப்போல் - நெஞ்சை
ஈர்த்திடும் வாளொன்று வேறுனதோ.

நாட்டு நலன் புரிவதிலே நமக்கென்ன வேலையென
நாம் உண்டுறங்கி இனி வாழ்வதுதான் வேலை
என்றுரைக்கும் மூடரையும் திருத்தவழி காண்போம்
எல்லோரும் ஒற்றுமையாய் வாழ வழிகாண்போம்

இனங்கள் ஒன்றாய் சேர்ந்து விட்டால்
இன்னல்கள் ஏதடா இந்த மண்ணில்
எத்தனை நதிகள் கலந்தாலென்ன
பெருங்கடல் என்றும் ஒரு கடல் தான்

மனங்கள் வேறு மனிதன் வேறென
மனித மனங்கள் அறியா உண்மைகள்
வெற்றிகள் எம்மை வந்து சேரட்டும்
ஒற்றுமை எங்கும் நாட்டில் ஓங்கட்டும்

வறுமை ஒழிந்து வளம் பெறவும்
பொறுமை பூண்டு நற் புதழ் ஓங்கவும்


சிறுமை பெருமை சிந்தை கொள்ளா
திறமையுடன் நாட்டை காத்திடுவோம்


அகத்திருளும் புறத்தொளியும் உள்ள
கொடியாரை
அன்றன்று புத்தியினால் ஆளாக்கி
விடுவோம்
பகுத்தறிவிலாத பாமரர் செய் வினையை
பகுத்துணர்ந்து குறை பொறுத்துப்
பாதுகாத்திடுவோம்.

அன்னை மணி இலங்கை மக்கள் அன்பு நெறி
சார்ந்து
அழியாத ஒற்றுமையோடனு தினமும்
வாழ்க
பின்னர் வரும் சந்ததிக்கோர் வழிகாட்டியாகி
பெயர் பெற்று புகழோடு ஒற்றுமையாய்
வாழ்க.

□□□

---தயானி ராசையா---






C j;J f F s p Rg;uh.

## இல்லை....இது கவிதை

அன்னை தெரேசாவை,அன்னை தடுத்திருந்தால்
உலக அன்னை இன்று இல்லை
கன்னை பிரிந்து உலகு வாழின்
உலகு என்ற எதிர்காலமில்லை.......இல்லை

ஆசை என்ற பொருள் இருக்குமட்டும்
அன்பு என்பதற்கு அர்த்தம் இல்லை
பேராசைப் பித்தர் வாழும் உலகில்
மனிதம் என்பதற்குப் பொருளே இல்லை

உறைவாளை உருவுவோர்
உலகில் உள்ளவரை
கறை படிந்த வரலாற்றில்
கலக்கம் இல்லை

நிறை மொழி மாதர்
இருக்கும் வரை
கறைபடிந்த வாலிபர்க்குக்
கலக்கம் இல்லை

தமிழ் வண்டு

## புதியதோர் உலகம் செய்வோம்...

துப்பாக்கிகளை ஒடித்து
அதை சமாதான பொங்களை பொங்க
கொள்ளியாக்கி;
இனவாதத்தை வேர்பிடுங்கி
அதை தோட்டாக்களுடன் அழித்துவிட்டு
புதியதோர் உலகம் செய்வோம்........

துயர்நிறைந்த பூமி யெங்கும்
சந்தோச பயிரை விதைத்து
[illegible] எதிர்கால சந்ததி [illegible]
[illegible] பேயை ஒழித்து
யுத்த அரக்கனை விரட்டி
புதியதோர் உலகம் செய்வோம்.......

இடிவிழுந்திருந்த தமிழினமும்
இணைந்து விரிந்த தேசசொந்நங்களும்
இன்னொரு முறை
இன்புமுற
புதியதோர் உலகம் செய்வோம்......

பனைமரமும் செழிக்கட்டும்
தேயிலையும் நாட்டை உயர்த்தட்டும்
மீனினமும் ராகம் பாடட்டும்
வயல்களும் வளர்ந்து கொளிக்கட்டும் - என்று
புதியதோர் உலகம் செய்வோம்.....

துப்பாக்கி சத்தம் ஓயட்டும்
அங்கு
மாதா கோயில் மணியோசையும்
பள்ளியின் பாங்கு ஒலியும்
பாஞ்சாலையின் காண்டாரமும்
இந்துவின் சுப்ரபாதமும்
புதியதோர் உலகம் செய்வோம்....

யாழ்தேவியும் தாய்வீடு வரவேண்டும்
நாகதீவுக்கு புத்தபுத்திரன் சென்றுவரட்டும்
மடுமாதாவில் மொழிபேதமின்றி பிரார்த்தனை
நடக்கட்டும்
கதிர்காமத்திலும் சேர்ந்தே வணங்கட்டும்
சிவனொளியாதத்தை சேர்ந்தே தொலட்டும் -
என்று
புதியதோர் உலகம் செய்வோம்......

பாலிசாவையும் காதலிக்கலாம்
செறினையும் மணக்கலாம்
இந்துவுடனும் இல்லறம் நடத்தலாம்
இமாலிகாவுடன் சேர்ந்தே போகலாம்
இனி உனக்கில்லை இனபோதம் என்று
புதியதோர் உலகம் செய்வோம்.....

பெண்ணுக்கும் உரிமை கொடுப்போம்
சிறுவர் துஸ்பிரயோகம் தடுப்போம்
போதை பொருட்களை ஒழிப்போம்
இனவாதத்தை மறப்போம் - என
புதியதோர் உலகம் செய்வோம்......

தமிழிலும் தபால் எழுதுவோம்
சிங்களத்தை நாங்களும் படிப்போம்
நாங்களும் நோன்பு இருப்போம்
தேவாலயத்தின் அப்பத்தை சாப்பிடுவோம்
சிவன்கோயில் தீர்த்தம் அருந்துவோம் - என்று
புதியதோர் உலகம் செய்வோம்........

பாரதி கவிதையில் கண்ட
தேசமதை நாங்கள்
தரலகம் என்னும் ஓரணியில்
திரள
புதியதோர் உலகம் செய்வோம்.

---எஸ்.பி.பாலமுருகன்---




இரா.அ.தென்றல் நிலவன்

# வேண்டும் வேண்டும் பலபிறவி

கல்லாகி மனிதனாய்ப் பிறந்தேன் நேற்று
போயாய்க் கணமாய்ப் பிறப்பேன் நாளை
பொல்லாத இந்தப் பிறப்பொதுக்கி நானே
நினைக்கும் பிறப்பாய்ப் பிறக்க வரம் தா

## பிறவிகள்

பப்பா மரங்கள் பழுத்திருக்க
பார்த்தவர் நாஊற
கொப்பில் இருந்து கூர் அலகால்
கொத்திச் சுவைக்கக்
காகமாய் வேண்டும் ஈங்கொடு பிறப்பு



சும்மா நிதம் சோறு தின்று
அம்மா என்று முட்டா வயிறு
தடவிப் பஞ்சு மெத்தை
தட்டிப் படுக்கும் வெட்டிப்
பயல் மீது விழுந்து கடிக்க
ஒரு கொடுக்கன் பிறவி




காதலித்துத் தோல்வி
அடைந்த நெரமதில்
அவள் தலையில்
பூவாக ஆவது
போய்க் குந்தும்
றோசாப் பிறவி

யானை விளாம்பழம்
தின்றது போல
துப்பாக்கியால் 'பூ' பறிக்கும்
துட்டனின் கொட்டமடக்க
மானமிகு வீரனாய் ஒரு பிறவி.....



பசியால் வாடிக் குளிரால் நிறைந்து
போர்த்து நடுங்கும் மாரி வேளையில்
ஓட்டுக்குள் அடங்கி,இதுவே
உலகென
மெய்யை மறந்து மணலில் கிடக்கும்
ஒரு நத்தைப் பிறவி
வலைஞர் வந்து கடலில் பிடித்தால்
கொலைஞர் என்று பட்டம் வருமே
ஆயிரம் முட்டை மணலில் இட்டுக்
கொக்கரிக்காமல் போ(கு)ம் ஒரு
பிறவி
முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்
வில்லங்கம் இனி எமக்கு வேண்டாம்!
காகக்கூட்டில் முட்டையிட்டு
கடமை இன்றிப் பறந்து செல்வேன்
கா.....கா....... எனக் காகம் கத்த
கூ........கூ........எனக் குஞ்சுகள் கூவும்........



பொறுப்பில்லாது உலகம் சுற்றும்
குயில் போன்றொரு பிறவி

வீட்டுக்குள் எசமான் தூங்க
வெளிவிறாந்தையில் நான் முடங்கித் தூங்க
வீட்டுக்குள் யாரும் வெளியார் வந்தால்
வாள்......வாள்........ எனக் குரைக்க வேண்டும்
வீரநாய் போன்றொரு பிறப்பு



கோடரி போன்றொரு அரசு இருக்கக்
கைப்பிடி போன்றொரு மந்திரி வாழ
வீடெரி போன்றொரு இராணுவம் வந்திட
நிலையாது ஒரு சமாதானம் என்று
கூம்பிடும் கோழிபோல் மரத்தினில் இருக்க
வந்திடும் ஒரு மேதினச் செய்தி:-
வடக்கும்,கிழக்கும் இணைந்த செய்தியில்
கூவிடும் ஒரு சேவலாய்ப் பிறவி



திக்கவயல் தர்மு

# தூக்குமேடையில் கவிதை

முஸ்லா ஜலீல் ஒரு இந்திய முஸ்லிம்
கவிஞர் இவர்
இந்தியாவின் சுகந்திரத்துக்காகப்
போராடியவர் இவரை
பிரிட்டிஸ் நிர்வாகம் தனது ஆட்சியில்
தூக்குத் தண்டனை
விதித்தது. அஞ்சா நெஞ்சம் கொண்ட
முஸ்லா ஜலீல் துக்குமேடையில்
கவிதைபாடினார்.
அந்தப் பிரபல்யமான கவிதை கீழே
காணப்படுகின்றது

''வசந்தத்தின் வனப்பை
உணர்ந்து நான் பாடினேன்
தேசத்துக்காகப் போராடப்போகும்
போது பாடினேன்
தூக்கிய கொடுவாள் கையில்
இருக்க இறுதிப்பாட்டை
நான் பாடுகின்றேன்......
சுதந்திரத்தை அனுபவிக்கக்
கவிதை
எனக்குப் புகட்டியது!
சாகும்போது போராடக் கவிதை
கட்டளை இட்டது.
என் வாழ்க்கை என் மக்களுக்குக்
கவிதை ஆகட்டும்''



தொகுப்பு:-திக்கவயல் தர்மு

## திருத்தொண்டு பாடும் திரை இசை வரிகள்

தன்மானம் காப்பதிலே-அன்னை
தந்தையைப் பணிவதிலே
பிறந்த பொன்னாட்டின் நல்ல முன்னேற்றம் காண
பொதுப்பணி புரிபவர் மகிழ்ச்சியிலே
ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்

**எம்.கே.ஆத்மநாதன்**

பொங்காத பெருங்கடல் பொங்கி வந்தது போல்
பொங்குது உள்ளமெல்லாம் அன்பில் முழுக்குதடா
போகாத துன்பமெல்லாம் போனதே என்றும்
தீராத சண்டைகளும் தீர்ந்ததடா!

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

வானம் நமது தந்தை
பூமி நமது அன்னை
உலகம் நமது வீடு
உயிர்கள் நமது உறவு

**பூவை செங்குட்டுவன்**

உச்சி வெய்யிலில் பிச்சை எடுக்கும்
பச்சைக் குழந்தைகள் பாரும் !
ஒரு பிடி சாதம் ஒரு பிடி அரிசி
ஒரு முழக்கந்தை தாரும்!

**கொத்தமங்கலம் சுப்பு**

அன்பினில் உலகாளலாம் எந்நாளும்
அமைதியினில் நலம் காணலாம் எல்லோரும்

**குயிலன்**

நதியைப் போல் நாமும் நடந்து பயன் தர
வேண்டும்
கடலைப்போல விரிந்த இதயம் இருந்திட
வேண்டும்
வானம் போலப் பிறருக்காக அழுதிட வேண்டும்
வாழும் வாழ்க்கை உலகில் என்றும் விளங்கிட
வேண்டும்

**புலமைப்பித்தன்**

பூமியில் நேராக வாழ்பவர் எல்லோரும்
சாமிக்கு நிகரில்லையா- பிறர்
தேவையறிந்து கொண்டு வாரிக் கொடுப்பவர்கள்
தெய்வத்தின் பிள்ளையில்லையா?

**கண்ணதாசன்**

பல நூல் படித்து நீ அறியும் கல்வி
பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம்
பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்
இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்

**வாலி**

தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்-கல்வி
தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம்-ஊரில்
கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப்
போக்குவோம்

**தஞ்சை ராமையாதாஸ்**

குயிலுக்கொரு நிறமிருக்கு-அதன்
குரலுக் கொரு நிறமிருக்கா?
கொண்டாடும் இந்தப் பொன்னான மண்ணில்
வந்தாடும் நிறம் எத்தனை எத்தனை
ஒண்ணான இந்த மனித இனத்தில்
உண்டான குணம் எத்தனை எத்தனை?
அட,கறுப்பும் இல்லை
வெளுப்பும் இல்லை
கண்ணிலேதானே பேதமிருக்கு!

**பொன்னடியான்**

பிறருக்காகக் கண்ணீரும் பிறருக்காகச் செந்நீரும்
சிந்தும் மனிதன் எவனோ
அவனே மனிதன்..........மனிதன்

**வைரமுத்து**

நன்றி :-மங்கை

## வாரியர் சொன்னவை

ஒரு வேளை சாப்பிடுபவன் யோகி
இரு வேளை சாப்பிடுபவன் போகி
மூன்று வேளை சாப்பிடுபவன் ரோகி

நாம் பற்று வைப்பது நாம் பொருளில்!
அவா என்பது பிறர் பொருளில் வைப்பது
நதிகளில் சிறந்தது காவேரி;ராகங்களில்
சிறந்தது சாவேரி.

ஆமை புகுந்த வீடு உருப்படாது; தேறாது.
அதைப்போல் மனம் என்னும் வீட்டில் அறியாமை
புகுந்து விட்டால் அவனது வாழ்விலே ஒளி
பிறக்காது.
அறியாமையை அகற்ற பொய்யாமை
மெய்யொளிப்
பேரொளியை செம்பொன் சுடரை எல்லோரும்
பின்பற்ற
வேண்டும்; பொய்யாமையிடம் அந்த ஆமை
சென்றாலும்
சுட்டு விடும்.
அரசாட்சி = அரன் சாட்சியாக நடப்பது

அரிச்சந்திரன் மனைவி சந்திரமதி அல்ல;
சந்திரவதி

பார்வதி போலச் சந்திரவதி. சம்பந்தி என்பதே சரி; சம்மந்தி அல்ல சம் என்றால் நல்ல;மந்தி என்றால்குரங்கு!

தமிழகத்தில் வடக்கு எல்லை திருவேங்கடமலை வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் என்கிறார் **பனம்பாரனார்.**

பிறவாது இருக்க வரம் தரல் வேண்டும்
ஐந்துவார்த்தை - **பட்டினத்தார்**
பிறவாமை வேண்டும்
**காரைக்கால் அம்மை**
இரண்டு வார்த்தையில் சொல்வதால்
பெண்கள் தான் புத்திசாலிகள்.

# கல்வி கற்போம்

கற்போம்! கற்போம்!!
கல்வி கற்போம்!!!
கண்போல கல்வியைப் போற்றிநாமும்,
கண்ணியத்தோடு கற்றிடுவோம்.

ஔவைப்பாட்டியின் நல்வழிக்கேற்ப,
ஔடதமாய் நாமும் கற்றிடுவோம்
இச்சையோடு கல்வியை நாம்
இடையூறு பாராமல் கற்றிடுவோம்.

சாதி,மத பேதமின்றி,
சாலவும் கல்வியைக் கற்றிடுவோம்!
சாதமாய்க் கல்வியை நினைத்து நாமும்
சாதனை நிகழ்த்திடக் கற்றிடுவோம்.

தந்தை,தாயின் அடிபணிந்து
தர்மம் தழைக்கக் கற்றிடுவோம்.
தயவுடன் கல்வியைக் கற்று நாமும்,
தரணியில் என்றும் உயர்ந்திடுவோம்.

**ஜெயன் பார்த்தசாரதி**
**சிவஞானம்**
**மட்டக்களப்பு**

எய்த அம்பு
பாயவில்லை
சிக்னலில்

**ஊத்துக்குளி சுப்ரா.**

## கருணாநிதி பற்றிக் கண்ணதாசன்

ஊர் உறங்கும் வேளையிலும் உள்ளம் உறங்காதான்
யார் மயங்கு போதினிலும் தான் மயங்காதான்
சீர் விளங்கும் வீரர் புவிப் போர் விளங்கவந்தான்
வீரன் கருணாநிதி.



## 7 ஆண்டுகள்

கோல்ட் சிமித் என்ற எழுத்தாளர் ஒரு நாளுக்கு நான்கு வரிகள் தான் எழுதுவார்.இவருக்கு Deserted Village|' என்ற நாவலை எழுத 7 ஆண்டுகள் பிடித்தனர்.

## கவி அகராதி

| | |
|---|---|
| 1.அசர்மத்தன் | - திறமையற்றவன் |
| 2.அணுக்கன் | - நெருங்கியதொண்டன் |
| 3.அதிதி | - விருந்தினன் |
| 4.அர்க்கியம் | - விருந்தினர்க்கு உபகாரம் செய்யும பொருட்கள் |
| 5.அளகம் | - கூந்தல் |
| 6.அறிதுயில் | - தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையில் உள்ள நிலை |
| 7.இடபதானம் | - எருதைத்தானமாகக கொடுத்தல் |
| 8.இருதுசமயம் | - கர்ப்பம் தரிக்கும் காலம் |
| 9.ஓப்புரவு | - உபகாரம் செய்தல் |
| 10.கஞ்சுகி | - காவற்பெண் |
| 11.குடிலபாவம் | - கோணல் தன்மை |
| 12.குணாட்சரநாயம் | - புழு மரத்தைக் குடையும் போது தற்செயலாக உண்டாகும் மர எழுத்து |
| 13.சாந்திராயணம் | - ஒருதிங்கள்இருக்கும் விரதம் |
| 14குலிசம் | - வச்சிரஆயுதம் |
| 15வைகுண்டபதம் | - திருமால் உலகம் |

ரயில் ஓடும் வேளையில்
மனம் ஓடும் கவிதை இது

# வேண்டும் ஒரு மனைவி

ஊர்ப் புதினம் எல்லாம்
உள் வாங்கி ஊர்
உள்ளமதை வருத்தாத
உத்தமமான மனைவி
வேண்டும்?

அடுத்த வீட்டில் பெண்களெல்லாம்
அடுத்தடுத்த அயல் நாட்டில்
இருந்து எல்லாம்
கணவன்மார் அனுப்புகிற
காசெல்லாம் எடுத்து வந்து
அழகழகாய்ப் பவுண் நகைகள்
வாங்கி வந்து
பகட்டில் நகை அணிந்து போகும் போது
உள் நாட்டில் இருக்கும்
என் உத்தமப் புருஷா.....
பாருங்கோ எனச் சொல்லி
பகிடிவதை செய்யாத
பத்தினி என்தன்
மனைவியாக வேண்டும்!

365 நாள் ஒரு வருசமாகும் !
வருடம் ஒன்றினிலே
முக்கால் மடங்கு பொழுதுகளை
மரக்கறியால் அவித்துவிட்டு
விரதம் எனச் சபதம் இட்டு
தன்னையும் வருத்தி
என்னையும் உருக்கி
மாமாங்கம், சந்நிதி,
கதிர்காமம்,சித்தாண்டி
ஓடிப் போகாத,சாட்சாத்
மிலிற்றறிப் பெண் ஒருத்தி
என் மனையாட்டி ஆக வேண்டும்


எட்டுப் பெண் பிறக்க
எட்டாத வறுமையில்
மாமா வாட
மூத்த பொண்ணு பத்மினியாய்
மின்னி நிற்க
சீதனமில்லாது பெண் எடுத்து
அவளுக்காய் வாழ்ந்து
வையகத்தில் உருகுகையில்

கண் மூடி ஒருநாள் மாமனிறக்க
இளைய பெண் ஏழுக்கும்
ஏற்ற மணாளன் நான் பார்த்து
ஓடி உழைத்ததையும் சீதனமாய்
நான் கொடுத்து
''மூத்தத்தான் நல்லவரே'' எனப்
பேரெடுக்க உழைப்பேனோ?
ஓ.....இறைவா ஏழு தம்பிமார்
வெளிநாட்டில் உழைத்திருக்க

ஏற்றபெண் ஒருத்தி ஒயிலாக வீட்டிருக்க
அந்தப் பெண் எவளோ
அப் பெண் ஒருத்தி
என் மனையாட்டி
ஆக வேணும்!

அத்தானுக்கு நாம்
அள்ளித் தருவோம்
காசென்று,பிரான்சிருந்து
கடிதம் வர
வீட்டைப் பார்க்க
நீ வேணும் எனவிங்கு
அயலவர்கள் அன்புசொல்ல
தேர்ந்தெடுத்த மூத்த மகள்
முத்தேயென ஏக மாமி
இடையிடையே சொல்லிக்காட்ட
சிமெந்து விலை அதிகம்
நில விலையோ குதிரை விலை
வீடு கட்டி முடிக்க
எத்தனை நாள் எடுக்கும்?
கட்டி முடிச்ச வீட்டில்
நீ இருக்க
சீர்வரிசை தருவதாகச்
சொல்லி மாமனார் தூதுவிடும்
மங்கையவள்
மனையாட்டி
ஆக வேண்டும்.

சேர்த்த சொத்தெல்லாம்
சேர்த்துக் கொடுக்க
அடுத்தடுத்து பெண்
பெறும் பெண்ணாகவா
நான் பெண் எடுப்பேன்?
வருசக் கொத்தியால்
நீ பெறினும்
மூக்கு,முழி வைத்த
முழு நிலாப் பெடியளாக
ஆண்களையே கருத்தரிக்கும்
அழகான ஒரு அதிஷ்டசாலி
என் மனையாட்டி ஆக வேண்டும்



# சமாதானம்

பரிசுத்தமாக வேண்டும்
நமது தேசம்!
பாராட்டு நல்க வேண்டும்
அண்டை தேசம்
பிரிவுற்ற கொள்கையினால்
தாழ்ந்தே போனோம்!
சரி இனி நாமெல்லாம்
சேர்ந்தே வாழ்வோம்!

குறி வைத்தே கோடரியால்
வெட்டிச் சாய்த்தார்
கொள்கையில்லா அரசியலார்
மக்கள் நட்பை !
நரி குணத்தார் நம் நாட்டில்
பெருகியதால்
அரிதாகிப் போனதன்றோ.
அரசியல் பண்பு.

தாலாட்டு பாடாமல்
குழந்தை தூங்கும்!
தாய்ப்பாலே இல்லாமல்
பிள்ளை வாழும்
வாலாட்டும் தெருநாயும்
நன்றி காட்டும்
வரலாறு கண்டதன்றோ
நமது நாடு!

அணுவணுவாய்ச் சாகின்றார்
போரினாலே!
அனுதினமும் வாடுகிறார்

போரினாலே
அணுகுண்டு செய்திடாதை
அன்பு செய்யும் !
அதையுணர்ந்தால் அகன்றிடாதோ
இங்கே யுத்தம்!

ஓடும் நதி மாவலியால்
மத்தி வாழும்!
பாடம் மீன் வாவியினால்
கிழக்கு வாழும்!
காடு சேர்ந்த கழனியினால்
தெற்கு வாழும்!
கடல் சூழ் தீவுகளால்
வடக்கு வாழும்!

வளமான வாழ்வு தன்னை
மண்ணில் தேடு!
பலமான எதிர்காலம்
உன்னில் உண்டு !
உளமாறச் சிந்தித்து
ஒன்றுபட்டால்
களம் காணும் போர்க்கனவு
கலைந்தே போகும்

தம் மொழிக்கு தனிஇடம்
கொடுக்க வேண்டும்
எம்மொழியும் பெரிதெனவே
மதிக்க வேண்டும்
மும்மொழியும் முயற்சித்துப்
படிக்க வேணடும்
செம்மையுற சேர்ந்திணைந்து
வழவேணடும்.

புத்தன் வந்த பூமியிலே
போரே வேண்டாம்.
புனித தேசம் செழித்திடவே
போரே வேண்டாம்
கத்தும் கடல் சூழ்நின்ற
நமது தேசம்
சத்தமின்றி காணவேண்டும்
சமாகானம்!

பிபிலை
நா.ஜெயபாலன்.

# போனேன்.....போனேன்

அகத்தியனைத் தேடிப்
பொதிய மலை போனேன்!-அவன்
அகால மரணம் அடைந்ததாக
ஆங்கொருவன் சொன்னான்!

அரிச்சந்திரனைத் தேடி
மாவிந்தம் போனேன்!-அவன்
வாய்மை எரிந்த நீறிங்கு
பணமாகக் கண்டேன்!

இராவணனைத் தேடி
ஈழ மலை எறினேன்!-ஆங்கு
அனுமான் குடியிருக்க
அழகாகக் கண்டேன்!

கம்பனைத் தேடிச்
சோழனூர் போனேன்!-அவன்
புத்தகத்தில் இருப்பதாக
புதியவன் சொன்னான்.

நாரதனைத் தேடி
இருப்பிடம் போனேன்-அவன்
மரிக்கவில்லை இன்னும் என
மமதையாகச் சொன்னான்!

-டிங் டொாங்-

# மணிக் கூட்டு முள்

நான் நிற்கச் சொல்லி விளையாடச் சென்று விட்டேன்
நாளே என் வாழ்க்கையை ஓடச் செய்துவிட்டாய்
நாளே ஏன் நிற்காமல் என்வாழ்க்கையை ஏமாற்றி விட்டாய்?
நீ சொல்லி இருந்தால் நானும் உன்னுடன் ஓடி வந்திருப்பேன்
ஏன் நீ என்னிடம் சொல்லாமல் (நீ) மௌனம் சாதித்தாய்
நாளே பதில் கூறு நாளே!

ஜோ.வேணுசங்கர்.



# மறக்க நினைத்தாலும் துளிர்க்கும்

## வாழ்க்கை

வாழப்போவது
எத்தனை காலமடி?
அன்பே
இந்தக் கணிப்பொறி யுகத்தில்
காணாமல் போட்டு விடாதே
குடும்பத்திற்காக உன்னை நீ
உரமாக்க வேண்டாம்!
உன் அன்பெனும் அமுதை
உரமாக்கினால் போதும்.

## வரதட்சணை

இந்த வரதட்சணை வில்லை
வளைப்பது யார்?
ராமர்கட்கு இன்று ரத்தமில்லை
ஜனகனோ பாவம்
சாய்வு நாற்காலியில்
இனி நாமே ஓடிப்பது நியாயம்
எங்கே சீதைகளே
கொஞ்சம் சேருங்களேன்.

பொன்மணி வைரமுத்து

## பூ விலங்கு

தலையில் பூ விலங்கு
கையில் பொன்விலங்கு
காலில் வெள்ளிவிலங்கு
சுவாசத் தடைக்கு
மூக்கில் கல் விலங்கு
ஒவ்வொரு மூச்சிலும்
அவள்
விலங்குகளை நுகர்கிறாள்.

கந்தர்வன்

## பேருந்து

வீடு திரும்பக் காத்திருக்கிறாள்
பேருந்துக்கு
கையிலிருக்கும் டிபன் பாக்ஸ்
போலவே மனது
உருவத்தை உதிர்த்துக்
கொண்டிருக்கிறது வயது.
எச்சில் விழிகட்கு மாத்திரம்
இன்னும் பெண்ணாய்த் தெரிகிறாள்.

## சேரி

ராஜதானியில்
மலர்க் கிரீடங்கள்
சூட்டப்படுகின்ற போது
சேரிக் குழந்தைகளின்
சின்ன விழிச் செடியில்
உப்பு மலர்கள்
உதிர்ந்து விழுகின்றன.

மு.மேத்தா

## *காதல் உயில்*

உன்னை நான்
பாத்திராவிட்டில்
என்
கவிதை நோட்டு
வெள்ளையாகவே இருந்திருக்கும்!
உன் கூந்தல்
விண்ணப்பித்திரா விட்டால்
என் தோட்டத்தில்
பூச்செடிகள் வைத்திருக்க
மாட்டேன்

வைரமுத்து

# அகளங்கனுடன் சில நிமிடங்கள்!

பறவைகளிடமும், மிருகங்களிடமுமிருந்தே மனிதன் பண்புகளையும் கற்றுக்கொண்டான். தூர்க்கணாங் குருவியினது கூட்டினை, கோபத்தால் பியித்தெறிந்த குரங்கிலிருந்து கூர்ப்புப் பெற்றமனிதன் இன்னும் எவ்வளவோ விஷயங்களை பகுத்தறிவற்ற சீவராசிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு நா. தர்மராஜா (அகளங்கன்) கூறினார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் இந்துக் கலாசார, சமய விவகார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த முத்தமிழ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

ஆதி மனிதனுக்கு புத்தகக் கல்வி தேவையாகவிருக்கவில்லை. அவனது வாழ்வுக்கு அனுபவக் கல்வியே பெரிதும் பயன்பட்டது. தற்போதைய சமூக அமைப்பிலே ஏட்டுக் கல்வியே சகல பிரச்சினைக்கும் தீர்வாக அமையும் என்ற கட்டாயத் தேவை இருக்கிறது. எமது கல்வி சான்றோர்களை உருவாக்கும் வகையில் அமையவில்லை. விஞ்ஞானத்திலே வியத்தகு சாதனைகளைப் புரிந்து விட்டதாகத் தம்பட்டமடிக்கின்றோம். ஆனால் ஐயறிவு படைத்தவைகளிடம் பெற்ற விஷயங்களே எமது வாழ்க்கைக்கு உதவுகின்றது.

காலையில் எழுந்தவுடன் முகம் கழுவ வேண்டும் என்ற நல்ல பழக்கத்தை கற்றுத் தந்தவைகள் பூனைகளே. தமது முன்னங்காலால் முகத்தை தடவிக் சுத்தஞ் செய்யும் பூனைகள், தான் கழித்த மலம் மற்றையோருக்கு அருவருப்பைக் கொடுக்கக் கூடாது என்றெண்ணி, மண்ணைக்கிளறி, அதற்குள்ளே மலத்தைப் புதைக்கும் இனிய செயலைப் புரிகின்றன. நாம் பயன்படுத்துகின்ற நவீன மலகூடங்கள் பூனைகள் தந்த அனுபவத்தின் வெளிப்பாடுகளே.

எமது உடலைச் சுத்தமாகப் பேண வேண்டும் என்ற உண்மையை உணர்த்திய பெருமை யானைகளேயே சாருகின்றது. தினமும் யானைகள் நீர்நிலை சென்று தம்தும்பிக்கரத்தினால் நீரெடுத்து உடலைக் கழுவும் வழக்கம் கொண்டவை. வைக்கோலினால் அடுக்கடுக்கான அறைகளைக் கொண்டு கட்டிய தூக்கணாங்குருவியின் கூட்டினைப் பார்த்த மனிதன் மஞ்சளாவிய மாடங்களை கட்டத் தொடங்கினான் மின்மினிப்புச்சியைக் கொண்டு சென்று பச்சைச் சாணத்தின் மீது பரவச் செய்து வெளிச்சத்தைப் பெற்று வந்ததூக்கணாங்குருவியினது செயலே! வீட்டுவெளிச்சம் தேவை என்பதை என்பதை ஆதிகால மனிதனுக்கு உணர்த்தியது. நாயிடமிருந்து நன்றியறிதலையும், காகத்திடமிருந்து கண்ட ஒற்றுமையையும், ஒன்று கூடி உண்ணும் பழக்கத்தையும் வின்பற்ற மனிதன் தொடங்கினான். சோடி மாறித்திரியாத புறாக்களும், அன்றில் புறவைகளுமே கறிபொழுக்கத்தையும், ஒருத்திக்கு ஒருவனே என்றஉயரிய பண்பையும் கற்றுத் தந்தன.

சேர்த்த சொத்துக்கள் அனைத்தையும் இழந்து விட்ட நிலையில் இப்போது மூன்றாம் தலைமுறைக்குச் சொத்துச சேர்க்க தலைப்பட்டுள்ளோம். சேமித்து வைக்கும் பழக்கத்தையும் காட்டித் தந்தவை தேனீக்களும், கறையான்களுமே. தேனீ தனது தேவைக்காகச் சேகரித்து வைக்கும் தேனை மனிதன் தானும் பயன்படுத்தி, கடவுகளுக்கும் அபிஷேகம் பண்ணுவதே வேதனையானது.

பாசத்தையும், அன்பையும் புகட்டியவை பசுமாடுகளும், எருமைகளுமே. தாயன்பிலே பசுமாடு விளங்கியதை மனுநீதி கண்ட சோழனின் கதை தெளிவுபடுத்தி நின்றது.நடை என்ற உயர்ந்த ஒழுக்கத்தை பெண்களுக்குப் பயிற்றுவித்தவை அன்னப்பட்சிகளே. ஆக பறவைகளும் மிருகங்களும் கற்றுத் தந்த கல்வி மனித வாழ்வுக்குப் பெரிதும் துணை புரிகின்றது என்றார்.

---அகளங்கன்---








# எங்களூர் அழுகிறது



எங்களூர்
விடியச்சாமத்தை,
வெறித்துப்பார்த்து அழுகிறது

இரவெல்லாம் வெறிபிடித்த
துப்பாக்கி சப்தங்களால்,
செவிடாகிப்போன எங்களூர்,
காகம்,குருவிகள் கண்விழித்துக்
கத்தும் சப்தங்களைக் கூடக்
கேட்கமுடியாமல் அழுகிறது.

இரவில் படுத்திருந்த,
எங்கள் குழந்தை குட்டிகளெல்லாம்,
விடிந்தும் எழும்ப முடியாமல்
படுத்த பாய்களோடு விறைத்துப்போய்,
இரத்த வெள்ளத்தில்
தோய்ந்து கிடப்பதைப் பார்த்துப் பார்த்து
எங்களூர் வேதனையால்
விம்மி, விம்மி அழுகிறது,

அப்பாவி மக்கள்
மிருகங்களைப் போல் துடிக்கத்துடிக்க
அறுக்கப்பட்டு,
துண்டு துண்டுகளாக
அரிந்து கிடப்பதைப் பார்த்து,
பதறிதுடித்து
எங்களூர்,இடைவிடாது
கதறி அழுகிறது.

பாவம்
பால்குடிமாறாப்
பச்சிளம் குழந்தைகளைப்
பதறப்பதற,நித்திரையில்
அறுத்துத்துண்டாக்கிய
அரக்கர்களைக்
காறி உமிழ்ந்து,எங்களூர்
கதறி அழுகிறது.

எங்களூர்
இரவோடு இரவாக
ஈவு இரக்கமில்லாமல் அழித்து,
அழவைத்தவர்கள் யார்?
அவர்கள் மனிதர்களா? அல்லது
மனநோயாளிகளா?
விடை தெரியாமல்,
மீண்டும் மீண்டும் எங்களூர்
விம்மி விம்மி அழுகிறது.

இரவு
தூங்கிய உலகம்
இன்று,விழித்தது ஏனோ?
தாங்கமுடியாத துயரத்தால்
எங்களூர்,தலையிலடித்து
தேம்பித் தேம்பி அழுவது
எங்கள்,தேசத்தின் காவலர்களுக்கு
தெரியாமல் போனதில்
திகைப்பொன்றுமில்லைதான்.
ஏனென்றால்,
பாவம்!
அவர்கள் செவிப்பறைகளும்
'செல்'லடிகளால் நொருங்கிச் சிதைந்து
செவிடாகி விட்டன.
அதனால் அவர்கள்
இன்னும்,
எங்களூருக்கு வரவில்லை

விடிந்த அந்த,
விடியச்சாமத்திற்கே,
இரவு நடந்த,எல்லாம் தெரியும்.
புகைக்குள் மாடுகளை வீசிய
போக்கிரி நாய்கள்
இரவோடு இரவாய்,
எங்களூரைப்,பிணங்கள் புதைத்த,
புதைகுழிகளாக்கிய கொடுமைகள் யாவும்
விடியச்சாமத்திற்கு மட்டுந்தான்
விளக்கமாய்ப் புரியும்.
அதானால்தான் இங்கே,ஊரோடு சேர்ந்து,
அமைதியாய் அதுவும் அழுகிறது,
அப்போது,
எங்களூரின் சோகத்தின் பிம்பமாய்
சோறுகிடைக்கும் இடத்தையெல்லாம்,
சொந்தமாக்கி வாழ்ந்து கொண்டிருக்கும்
சாவல் காக்கா,
தொடை வரையில் கிழிந்து தொங்கும் தன்
காடைநிறச் சாறனால்
கழுத்துவரை போர்த்திக்கொண்டு,
'கார்'விட்டு வருகின்றான்.
''பீப்...! பீப்...!! பீப்...!!!
கிஸ்சராக் கோண்....!
தாமோனி வாப்பா....!
தள்ளுங்க தள்ளுங்க....!
பீப்...! பீப்...!

பாவம்!
நேசமுள்ள மனிதனாய் வாழ்ந்த சாவல்
இன்று,
மனைவியையும்,மக்களையும்
இரவோடு இரவாக
இனவெறியின் கோரப்பசிக்கு,
இரைகொடுத்து விட்டு,
தன் குடும்பத்தைப் புதைத்த

அதே புதை குழிகளிலேயே
அவன் ஆத்மாவின் உணர்வுகளையும்
புதைத்து விட்டு
நடைப்பிணமாக வாழ்கிறான்.
பாவம்!
எதிலும் பற்றற்ற அனாதையாய்
''கிஸ்சராக் கோண்....!
தம்மோளி வாப்பா...!"
என்னும், இரு
கருத்தில்லா சொற்களை மட்டும்
தனக்குத்துணையாக எடுத்துக் கொண்டு
ஓய்வின்றி
கார் விட்டுத் திரியும் அவன்,
எங்களூரின் பரிதாப ஜீவன்களில்
முதன்மையானவன்.

எங்களூர்,
சாவலுக்கும் சொந்த ஊர்தான்.
அவனும் இந்தக்கிராமத்து
அழகிய மண்ணில்தான்
ஆடி ஓடி விளையாடினான்.
எழிலான இக்கிராமத்தின்
இயற்கையின் இனிய ராகத்தைப் பாடி
அவனுந்தான் ரசித்து மகிழ்ந்தான்
ஆனால்
எங்களூர் அழும்போது
அவன் மட்டும் அழாது
இரக்கமற்ற இனவெறியைத்
தேடிப் பிடித்து,
அவன் ஆத்மாவின் காரால்
அதை அடித்துக் கொலை செய்ய
அவன்,ஓடிக் கொண்டிருக்கிறான்.
பாவம்!
அவன் காருக்கு,
சூரியன்,
மறைவதும் ஒன்றுதான்.
அது மீண்டும்,
வருவதும் ஒன்றுதான்.
அதற்கு ஓய்வேயில்லை.
அநியாயத்தால் அனாதையாய்ப் போன
அப்பாவிச்சாவலையும் சேர்த்துத்தான்
இன்று,எங்களூர் அழுகிறது,

பாவம்!
அவன்மட்டும கொஞ்சக் காலமாக
எங்கள் கிராமத்தையும்
அதன் எழிலையும் மறந்து,
மீள முடியாத சோகத்தோடு
இனவெறி அரக்கனைத்தேடி அழிக்க
ஓய்வின்றி காலையும் மாலையும்
கார்தான் ஓடிக் கொண்டிருக்கிறான்

எஸ்.முத்துமீரான்

# வண்டொன்று வந்தது !

வண்டொன்று வந்தது
மலரொன்றில் நின்றது
நில் என்று சொன்னது.
நிலையாமல் நின்றது.

கல் ஒன்று காட்டுது
தமிழ்த் தொடர்பொன்று,நாட்டுது!
கொல் என்று எழுந்தது
கொல்லாதே என்றது
'சில்'என்று பறந்தது
இவ்விடம் போனது.

வண்டொன்று வந்தது
மலரொன்றில் நின்றது
பாணன் சூடான் பாடினி சூடாள்
ஆணா,பெண்ணா,பூவே நீ
மலர்ந்தது ஏன் என்று கேட்டது!
வண்டுக்காய் மலரவில்லை
பெண்ணுக்காய்,ஆணுக்காய்
மலரவில்லை,இன்று
சமாதானம் ஈங்கில்லை
என்றால் பூக்களும்
இனி மலரப்
பூமி இல்லை
புலர்காலம் ஏன் மலர்ந்தோம்?
பூ ஒன்று சொன்னது?

வண்டொன்று வந்தது!
மலரொன்றில் நின்றது!!
பூவே கேள் என்றது
பூ ஒன்று கேட்டது
வண்டொன்று சொன்னது!
பூச்சூடும் பெண்களெல்லாம்
போர்க்களத்தில் என்றது
விடுதலைப் பூ மலர்வதற்கு
நேரத்தைக் கேட்டது!
அன்றலர்ந்த தாமரை போல்
அரும் உயிரை ஈந்து நின்ற
போராளிப் பெண்களையே
கேட்டிடுவாய் என்றதுவே
பூ மலரா மொட்டொன்று!

ஈழ மொட்டு



# கண்ணதாசனின் பார்வையிலே இதயம்கவர்ந்த இலக்கிய வரிகள்

உலகில் சிரிப்பும் சிந்தனையும் மிக்கவர்கள் மிகவும் அரிது. சிந்தனை மிக்கவர்கள் சிரிப்புடன் சொல்லும் போது உலகமே அவன் பின்னால் நிற்கும். திருவள்ளுவர் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர். 'இடுக்கண் வருங்கால் நகுக' என எழுதிவைத்த திருவள்ளுவர் தனது தனிப் பாடல் மூலம் சிரிப்பினை உண்டாக்கியவர்! கீழேயுள்ள சிரிப்புக்கதை உண்மையோ, பொய்யோ, என்பதையிட்டுத் தெளிவு இல்லாவிடினும் வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் வழிமொழிக் கதைகளாகும்.

அந்திசாயும் நேரம்! வள்ளுவர் மதுரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். மதுரைக்குப் போகும் வழியில் மகத்து வாழ்க்கை என்ற சிற்றூர் இருந்தது. அந்த ஊரில் இயற்கை வனப்பு மிக்க பெரிய குளம் ஒன்று இருந்தது. குளத்தின் அருகில் விசாலமான நிழல் மரங்கள் நிழலைப் பொழிந்துகொண்டு இருந்தது. குளத்தில் இருந்து வந்த மென்தென்றல் அவருடலை வருடியது. இந்த நேரம் பொய்கையில் பூத்திருந்த மலர்களை அவர் ரசித்துக் கொண்டிருந்தார். இந்த ரசனைக்கு அங்கிருந்த படிக்கட்டு அவருக்கு மிகவும் உதவியது.

அப்போது பஞ்சாயத்து நடத்திவிட்டு நாட்சிண்மை உறுப்பினர் மன்ற உறுப்பினர் இருவரும் அவ்விடம் வந்தனர். படிக்கட்டில் தாழ்ந்த சாதிக்காரர் ஒருவர் உள்ளாரா என்ற எண்ணம் உறுப்பினர்களின் உள்ளத்தை வருத்தியது. இதில் சாதித்திமிர் கொண்ட ஒருவர் வள்ளுவரை நோக்கி 'ஐயா நீ யார்? உன் வர்ணம் (ஜாதி) என்ன?' என்று கேட்டார். வள்ளுவருக்கு நகைச்சுவை உணர்வு கைகொடுத்தது.'. 'நான் மாந்தன் எந்த வர்ணம் மாந்களிர் வர்ணம்' என்றார். (மாந்தளிர் வர்ணம் - மாநிறம்) வந்தவருக்குக் கோபம் பொங்கியது. உமது தமிழ் எனக்கு விளங்கவில்லை. நேரடியாகக் கேட்கிறேன்; உமது சாதி என்ன? ஓகோ.... அதுவா, நான்.... நான்.... 99ஆவது சாதி! இப்படி ஒரு சாதி இல்லையே அது நிற்க.... உமது சமயம்....? 13ஆவது சமயம்! என்ன அப்பனே.... எதைக் கேட்டாலும் விதாண்டாவாத விடைகள் வருகின்றன. அகம், புறம் எனப் பிரித்துப் பார்த்தால் பன்னிரெண்டு சமயங்கள்தான் இருக்கின்றன. ஓய்....13ஆவது சமயத்தைச் சார்ந்தவரே.... எந்த நீதியைக் கடைப்பிடிப்பவர் நீர்? வள்ளுவர் கூறுகின்றார்; ' நான் சிவனுடைய நீதியைச் சேர்ந்நவன்' 'ஒன்றும் விளங்கவில்லையே....!'

'நீர் முன்பு எந்த ஊரில் இருந்தீர்; இனி எந்த ஊருக்குப் புறப்படும் நோக்கம்?'

'நான் முன்பு இருந்த ஊர் கருவூர்; கடைசியாகப் போகப்போகும் ஊர் பேரூர்'

அன்பர்களே.... நீங்கள் இதுவரை கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னேன். நீங்கள கேளாத கேள்விகள் சிலவற்றிற்கு விடை உண்டு.

ஒளி: ஒளியைப பொறுத்தமட்டில் சூரியன், சந்திரன், தீ என்பவற்றைக் கடந்த போரொளியின் கூட்டத்தைச் சேர்ந்தவன்.

குடி: களங்கமற்ற குடி. இவ்வாறு கூறிய வள்ளுவன். பாடலில் விடையும் கொடுக்கின்றார்.

'சாதியிலே தொண்ணூற்றொன்பதாம் சாதி, சமயத்தில் பதின்மூன்றாம் சமயமாகும். நீதியிலே சிவனுடைய நீதியாகும். நிலைமையிலே வேதாந்த நிலைமையாகும். ஆதியிலே எங்களூர் கருவூராகும்.... அந்தத்தில் போயடைவோம் பேரூர் தன்னில், சோதியிலே பரஞ்சோதிக் கூட்டமாகும். சொல்லுதற்கு எமது குலம் சுக்கிலமதாமே!!

இப்போது ஆணவம் அடங்கிய நாட்டாண்மைக்காரர்: பெரியீர்.... 'பாடலின் பொருள் விளங்கவில்லை. விளங்கப்படுத்துங்கள்' எனக் கூறினார். வள்ளுவரின் விளக்கம் கீழே காணப்படுகின்றத:

நாதம், விந்து இரண்டும் சேர்ந்து தொண்ணூற்று எட்டுக்குள் அடங்கும். நான் அவற்றுள் அடங்காத சாதி என்பதைக் காட்ட 99ஆவது சாதி என்றேன்.

சமயங்கள் பன்னிரெண்டு. அகச்சமயம் 06, புறச்சமயம் 06, இந்த நிலையைக் கடந்த சமயத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக எதின்மூன்றாவது எண் குறிக்கப்பட்டது.

சிவன்நீதி - விருப்பு வெறுப்பில்லாத நிலை!

நாம் முதலில் தங்கியிருந்த இடம் தாயின் கருப்பை. அது கருவூர் எனக் குறிக்கப்பட்டது. நாம் கடைசியாகப் போகப்போகும் இடம் மோட்சம். இது பேரூர் எனக் குறிக்கப்பட்டது. சூரியன், சந்திரன், தீ என்ற மூன்று ஒளியினையும் கடந்த பேரொளியாய் விளங்குவோம்! சுக்கிலக்குடி என்றால் களங்கம் இல்லாத குடியாகும்.

கவிதைகளில் திருவள்ளுவர் குறிப்பிடும் ஊர்கள் புதுமையானவை. இவை வழிவழி வந்த கதையனென்றாலும் கவிதை ஒன்றில் ஒட்டிக்கொண்டதால் வேறு யாராவது பாடியிருக்கலாம் எனவும் சொல்லலாம். இது விவாதத்துக்கு உரியது. ஆயினும் கவிதை பழம் பெருமை வாய்ந்தது.

இந்தப் பாடலை கவிஞர் கண்ணதாசனும் படித்துத்தான் இருப்பார். பண்டைய கவிதைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட கண்ணதாசன் இக்கருத்தைத் தனது திரைப்படப்பாடல் ஒன்றில் தனது கருத்தாக் மாற்றிப் புதுமையாகச் சாகாவரம் அளித்துள்ளார். பாவம் திருவள்ளுவர். தனது கருத்து ஒன்று இருபதாம் நூற்றாண்டில் வேறு விதமாகப் பாடப்படும் என்றும் அது திரைப்படத்தில் இடம்பெறும் என்றும் அவர் எண்ணியிருக்கமாட்டார். இதோ கண்ணதாசனின் பார்வை பட்ட பாடல்:

எந்த ஊர் என்றவனே
இருந்த ஊரைச் சொல்லவா?
அந்த ஊர் நீயும்கூட
அறிந்த ஊர் அல்லவா?!

உடலூரில் வாழ்ந்திருந்தேன்
உறவூரில் கலந்திருந்தேன்
கருவூரில் குடிபுகுந்தேன்
மண்ணூரில் விழுந்துவிட்டேன்!

கண்ணூரில் வளர்ந்திருந்தேன்
கையூரில் தவழ்ந்திருந்தேன்
காலூரில் நடந்த வந்தேன்
களையூர் வந்துவிட்டேன்!

வேலூரைப் பார்த்துவிட்டேன்
விழியூரில் கலந்துவிட்டேன்
பாலூறும் பருவமெனும்
பட்டினத்தில் குடிபுகுந்தேன்!

காதலூர் காட்டியவள்
காட்டூரில் விட்டுவிட்டாள்
பாலூறும் பருவமெனும்
பட்டினத்தில் குடிபுகுந்தேன்!

பள்ளத்தூர் தன்னில் என்னைப்
பரிதவிக்க வைத்துவிட்டு
மேட்டூரில் அந்த மங்கை
மேலேறி நின்றுகொண்டாள்!

கீழூரில் வாழ்வதற்கும்
கிளிமொழியாள் இல்லையடா
மேலூரு போவதற்கும்
வேளை வரவில்லையடா!

கண்ணதாசன் வலிமையான கவிஞர் மாத்திரம் அல்ல. மற்றவர் சொன்ன கவிதைகளையோ, பாடல்களையோ தன்வசப்படுத்தும் ஆற்றலும் உள்ளவர்.

# மறக்க முடியாத சாமி சிதம்பரனாரின் புதுக்குறள்.

(சென்ற இதழில் சாமி - சிதம்பரனாரின் புதுக்குறள் பற்றிக் குறிப்பிட்டு இருந்தோம். இந்த இதழில் வாசகர்கள் வாசித்து மகிழப் பின்னோக்கிய சில தகவல்களைத் தந்திருக்கின்றோம்.
தொகுப்பு: மேகலை வாணி)

காலம்சென்ற தமிழ்ப் பேரறிஞர் திரு சாமி சிதம்பரனார். சிறந்த தமிழ் அறிஞர். 1953 ஆம் ஆண்டிலேயே அவர் ஒரு புதுக்குறளை இயற்றினார். எழுபத்து ஐந்து அத்தியாயங்களைத் தன்னகத்தே கொண்டது இந்தப் புதுக்குறள்! மொத்தமாக 750 புதுக்குறள்கள் இந்நூலில் இடம் பிடித்துக் கொண்டான! இதனை இன்றைய இளம் எழுத்தாளர்கள் அறிய மாட்டார்கள என்பது உண்மையே.

### *எழுத்தாளன்*

எழுத்தாளன் பற்றி சாமி சிதம்ரனார் புதுக்குறளில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''உயிர்க்கிறுதி வந்தாலும் உள்ளதைக் கூற
பய மற்றவ னெழுத்தாளன்"

இந்நூலில் புதுமை என்னவெனில் இந்நூலுக்கான முகவுரையை அவரின் மனைவி சிவகாமு சிதம்பரனார் எழுதியுள்ளதே! ''புதுக்குறள் போற்றுதற்குரிய சிறந்க பகுத்தறிவு நூல்! அறிவை நல்வாழ்க்கையை விளக்கும் என்று சிவகாமு சிதம்பரனார் தமது கணவரின் இந்நூலைப் பாராட்டி எழுதியுள்ளார் (25-07-1961) திருக்குறள் தமது புதுக்குறளால் இன்னும் ஏற்றம் அடையும் எனச் சாமிசிதம்பரணார் எழுதியுள்ளார். இப்புதுக்குறளில் நாம் ரசித்தவற்றில் இருபத்து ஐந்த குறள்களை அங்கொன்றும், இங்கொன்றுமாக எடுத்துக் கவிதேசத்தில் தந்திருக்கின்றோம். ரசித்து மகிழ்க!

### *புதுக்குறள்கள்*

1) இரப்போரும் ஈவோரும் இல்லாமற் செல்வம்
சுரக்கின்ற நாடே சுகம்.
(நாடு)

2) வருவாய் பெருக்கி வரிகள் குறைக்கும்
அறிவாளர் ஆள்வதரசு
(நல்லாட்சி)



தொடர்ச்சி மறுபக்கம்...

3) பஞ்சத்தை வாலறுத்துப் பட்டினிச்
பஞ்சைகள் ஆட்சி படும்.

(தீயாட்சி)

4) வல்லார் துணையார், வறியோர் பேரிடியாய்
தொல்லை தருவதரசோ?

5) தந்திரத்தில் வல்லமையும், தாராயச்
சிந்தனையும்மந்திரிகட்கேற்ற குணம்.

(அமைச்சர்)

6) நல்ல மரத்தின் நடுப்புகுந்த செல்லனையர்
பொல்லாத ஊழியர் தாம்.

(அதிகாரிகள்)

7) ஆராண்டால் என்னன் றலட்சிய மாயிரார்
வீரப் பொதுமக்கள் தாம்.

(குடிமக்கள்)

8) ஓயா துழைக்கும் குடிமக்களால் அரசு
சாயாமல் ஓங்கி வளரும்.

(குடிமக்கள்)

9) ஆத்திரத்தை எழுப்பி ஆள்வோரைப்
பாதலத்தில்வீழ்த்தும் அடக்கு முறை

10) பொன்னாசை கொண்டு பொருள் உற்பத்தி

செய்வதனால்என்ன பலன் மக்களுக்கே.

(உற்பத்தி)

11)வேலைகளைச் செய்ய விரும்புகிறோம் என்று
வரும்காளையரைக் காத்தல் கடன்.

12) பண்டங்கள் விற்றுப் பணம் குவிக்கும்
சாதசரேகிண்டுவார் போர் நெருப்பையே.

(போர்)

13) தன்னலத்துக்காகத் தழுவுமோர் தோழமை
சின்னவாளில் நைந்து விடும்.

(தோழமை)

14) இன்பமே காணாமல் ஏங்கித் தவிப்போர் தம்
துன்பம் துடைப்பதெழுத்தாம்.

(எழுத்தாளர்)

15) நெஞ்சத்து உறுதியும் நேர்மைக் குணமுமே
அஞ்சாத வீரர்க்கு அணி.

(வீரம்)

16) நிலத்தின் இயல்பால் நிறம்திரிந்த மக்கள்
குலத்தில் வேறாவதுண்டோ?

(சாதிவேற்றுமை)

17) மண்டைக் கிறுக்கால் பிறரை மதியாதார்க்
குண்டோ உலகிற் சுகம்.

(செருக்கு)

18) காசிக்குச் சென்றால் கருமம்
தொலையுமெனப் ஞாலத்தில் இன்பமலை.

19) காலத்திற் கேற்றபடி காரியங்கள
செய்யார்க்குஞாலத்தில் இன்பமிலை.

20) வெற்றியே தோல்வியிலை என்னுமோர்
வீரமனம் பெற்றவரே வாழ்வுடையார்.

(மனம்போல் வாழ்வு)

21) தென்றல் உடற்கின்பம்;தெளிந்த நெறி
ஒழுகல் என்றும் அமைதி தரும்.

22) மானத்தை விற்றுடலைக் காக்கும்
மனிதரினம் காணாமல் போவதும் நன்று.

(அமைதி)

23) துன்புற்றபோதும் நிழலாய்த் துணை
நண்புக்குரியவராம்.

(கலவை)

24) மாற்றார் பலமழிக்க மந்திரத்தால்
ஆற்றல் படைதிரட்டல் ஏன்?

(மந்திரம்)

25) அன்பற்ற கொள்ளையர்கள்,
அக்கிரமக்தாரர்கள் இன்பத்திற்காம் மதங்கள்.

(மதம்)

புதுக்குறள் எப்படி இருக்கிறது.உங்களின்
அபிப்பிராயங்களையும் எமக்கு எழுதி
அனுப்புங்கள்.

(ஆசிரியர்)

STs systems

Typed and Designed by S.Kajendran.

இச் சஞ்சிகை 481, பார் வீதியில் வசிக்கும் கவிஞர் திக்கவயல் சி.தர்மகுலசிங்கம் அவர்களுக்காக- 46/3, கதிர்காமர் வீதி, மட்டக்களப்பில் அமைந்துள்ள STs சிஸ்டம் நிறுவனத்தில் வடிவமைக்கபட்டது.



# சண் பான்சி பலஸ்

சண் என்பதே எங்கும் பேச்சு மட்டு நகரில்
வர்த்தகத்தின் சின்னம் இவர்கள். எவர்சில்வர்
பொருட்கள் தொடங்கி, அழகுக்கு அழகு செய்யும்
அத்தனை அழகுசாதனங்களும், பிளாஸ்ரிக்
பொருட்களும் பெற நாடவேண்டிய இடம்



**சண் பான்சி பலஸ்**
**163, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு**
**☎-065-23092.**





உலகில் உள்ளவை ஐந்து கண்டங்கள்
ஆசியாவே பெரிய கண்டம்,
தெரிந்த விசயம் இதுவன்றோ!

தெரியாத விசயம், புரியாத விசயம்
ஒன்றுண்டு!
ஆசியன் ஹாட்வெயார் என்ற
பெயரில் ஒரு கடையுண்டு
மட்டக்களப்பு பசாரில்!
அவரிடம் சீமெந்து தொடங்கி
வீட்டோடு வரை உண்டு விற்பதற்கு!
இத்தனைக்கும் நாடுங்கள்!

## ஆசியன் காட்வெயார்

**32B, பசார் வீதி,**
**மட்டக்களப்பு.**
**☎ 065-22994.**



## லக்கி லக்கி ! லக்கி



லக்கிக்கு மறுபெயர் அதிர்ஷ்டம்
நல்ல உடைகள் அணிந்து போனால்
வந்திடுமே அதிர்ஷ்டம்!
கந்தல் உடை அணிபவர்களை
எவருமே மதிப்பதில்லை:
இது துரதிஸ்டம்!
நன்மணிகாள் கண்மணிகாள்
மாணவமணிகாள், பாலர்
உடை தொடங்கி பாட்டி
அணியும் உடைவரை
வாங்குவதற்கு நாடுங்கள்

## லக்கி எம்போரியம்

**45, மெயின் வீதி,**
**மட்டக்களப்பு.**

## செங்கலடியில்

சீதையின் மோதிரத்தை அனுமான்
பெற்றான்: பேறு பெற்றான்
எனச் சொல்லி என்ன பயன்?
அவர்கள் காலம் முடிந்ததுவே
புவியுலகில்!



ஆகையினால் எமக்கென்று செய்ய
வேண்டும் தங்க நகை ஆபரணங்கள்
வாழும் உலகில்!!
அழகுக்கு அழகுதரும் அத்தனை
ஆபரணங்களும் வாங்குவதற்கும்
விற்பதற்கும் சிறந்த இடம்.

**விஜித்தா ஜூவல்லரி**

50, திருமலை வீதி,
செங்கலடி.
065-40046.



## ஈஸ்ரண் றேடிங் கொமினிக்கேசன்

செங்கலடி நகரின் பிரதான சந்திப்பு
இவர்கள்.
தொலைத்தொடர்பு என்றால் என்ன?
தொலையாத நோய்களினால்
அவஸ்த்தைப்படுவோருக்குச்
சரியான நேரத்தில் விற்பனை
செய்யும் மருந்தகத்தின் பெட்டகமும்
இவர்களே!
தொடர்பு கொள்ளுங்கள்.

ஈஸ்ரண் றேடிங், கொமினிகேசன்
ஈஸ்ரண் மெடிக்கல்ஸ்.



இல: 54 மெயின் வீதி,
செங்கலடி.
065-40450. 065-40230.



## மஞ்ஜூஸ் கபே



நினைத்தால் இனிக்கும்
நெஞ்சம் உள்ளார்
உலகில் உண்டு
தூரத்தில் இருந்து
நினைத்தாலும் நாவில்
ருசிக்கும் உணவு
வகைகள் யாவும்
இவரிடம் உண்டு.



நீங்கள் மட்டு நகரில் வரும் போது
நல்ல உணவை நாம் தருவோம்.

**மஞ்ஜூஸ் கபே**

41, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
065-23640.



நல்ல டாக்டர் இருக்கிறார்கள்
நம்நாட்டில்!
இல்லை எனச் சொல்லவில்லை
ஈழ நாட்டில்!
ஆனாலும் நல்லமருந்து
இல்லையெனில் என்ன சுகம்
இவர்களினால்?
கல்லாப் பெட்டியில் காசிருந்தாலும்
இல்லாத மருந்துக்கு விலை
கொடுக்கலாமா?
இல்லாத மருந்துப் பொருள்
இல்லை எனாது கொடுத்துக்
காத்தான்குடியில் புகழ் சேர்க்கும்
மருந்துக்கடை

**யுஸ்லா பார்மசி**

104/1, மெயின் வீதி,
காத்தான்குடி.
இருப்பிடம்: 065-45142.
Fax : 065-45042.
Mobile : 0777-851007.
M.M.A. LATHEEF.